Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C1325)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 08 புதன்கிழமை (21.03.2012) பக்கங்கள் 16 ஓசை - 172




7500 3 பேருக்கு போதும் 08



குடிநீருக்கு தட்டுப்பாடு 05



உள்ளூர் அமெரிக்கரால் ஆபத்து 12



சீரியலும் நாங்களும் 07

# வாக்கெடுப்பு நாளை

## ஜெனிவாவில் பலப்பரீட்சை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் நாளைய அமர்வின் போது இலங்கை தொடர்பான யுத்தக் குற்றங்களுக் கெதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

மேற்படி மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கும் இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் நடைபெறவுள்ளது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை நாளை மாலை ஐ.நா. மனித உரிமை பேரவையில் விவாதத்துக்காகச் சமர்பிக்கப்படவுள்ளது.

குறித்த பிரேரணை அமெரிக்கப் பிரதிநிதியால் சமர்பிக்கப்படவுள்ளதாக ஜெனிவாவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா. மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கும் பிரேரணை குறித்து கருத்து வெளியிடத் தலா மூன்று நிமிடங்கள் ஒதுக்கப்படும். அதன் பின்னர் இறுதியாக இப் பிரேரணை குறித்து பதிலளிக்கும் சந்தர்ப்பம் இலங்கைக்கு வழங்கப்படும். இலங்கையின்

15 ஆம் பக்கம் பார்க்க

## இராஜதந்திர பின்னடைவு

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து ஜெனிவாவில் இலங்கையின் இராஜதந்திர முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் விவாதத்துக்கு எடுக்கப்பட உள்ள நிலையில், தீர்மானத்தை முறியடிக்கும் இலங்கையின்

15 ஆம் பக்கம் பார்க்க

## அங்கத்துவ நாடுகள் மீது அமெரிக்கா அழுத்தம்

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறும் அமெரிக்கா தற்போது பல்வேறு நாடுகளுக்கும் அழுத்தம் கொடுத்து வருவதாக சிங்கப்பூரிலுள்ள அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத விடயங்கள் தொடர்பான சர்வதேச ஆய்வு நிலையத்தின் பேராசிரியர் றொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை வெற்றி கொள்வதற்கான கடும் பிரயத்தனத்தில் அமெரிக்கா தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய ஆபிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றை இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு அல்லது நடுநிலை வகிக்குமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் இலங்கை மிகவும் திறமையான முறையில் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதெனப் பேராசிரியர் றொஹான் குணரட்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் போராட்டத்தின் போது இரண்டு தரப்பினருக்கும் வெற்றிவாய்ப்பு உள்ளதால் இலங்கை அரசு ஆபிரிக்க, ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடு

15 ஆம் பக்கம் பார்க்க



பிரேரணையை எதிர்த்து...

## இந்தியாவின் ஆதரவு பரம திருப்தியில் அமெரிக்கா

இலங்கை தொடர்பான பிரேரணையை ஜெனிவாவில் நாம் உறுதியாக வலியுறுத்துவதற்கு பிரதான உதவியாளர் ஒருவர் கிடைத்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் மனித உரிமை பேரவையின் ஜெனிவா தூதுவர் ஈலின் டொனஹோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணைக்கு இந்தியா தனது ஆதரவை வழங்க முன்வந்தமை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## கனேடிய இராஜதந்திரிகள் கொழும்புக்கு விரைவு

(ரொறொன்ரோ)

ஐ.நா. மனித உரிமைப் பேரவை அமெரிக்காவின் தீர்மானம் குறித்து இலங்கை மக்களின் மன உணர்வுகளை அறிவதற்காக கனேடிய இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட்டின் பணிப்பின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர் கிரிஸ் அலெக்ஸ்சாண்டர், இவர் முன்னாள் கனடாவின் ஆப்கானிஸ்தானிற்கான தூதுவர் ஆவார். இவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் ரிக்டகஸ்ரா, செனட்டர் வேன் வைட் ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

மூன்று நாட்கள் தங்கியிருக்கும் இக் கனேடியக் குழுவினர் பலதரப்பட்ட டோரையும் சந்திக்கவுள்ளனர். இவர்களது பயண ஒழுங்கு விபரத்தை கனேடிய வெளிவிவகாரத் துறை வெளியிடவில்லை. எனினும், இவர்கள் யாழ்ப்பாணத் திற்கும் பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

15 ஆம் பக்கம் பார்க்க

## சேதனப் பசளை விற்பனை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை வளாகத்தில் சேதனப்பசளை விற்பனை மையமொன்று இன்று முற்பகல் 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ம.பற்றிக் நிரஞ்சன், யாழ்.மாநகரசபை சுற்றுச்சூழல் அதிகாரி ந.சூரியராஜ், யாழ்.மாநகரசபை சுகாதாரக் குழுத் தலைவர் விஜயகாந் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (பா)

## படை வீரர்களின் சாகசம் யாழ்.நகரில் கண்காட்சி

பலாலி படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் படை வீரர்களின் சாகச நிகழ்வு ஒன்று யாழ்.நகரில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள படையினரது இந்த சாகச நிகழ்வுகளுக்கான பிரம்மாண்டமான தயார்ப்படுத்தல்களில் நேற்றுப் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இந்த ஒத்திகை நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்குப் பெருமளவு படையினர் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பிரசன்னமாயிருந்தனர்.

உலங்கு வானூர்தியில் இருந்து கயிற்றைப் பற்றிய வாறு தரையிறங்குவது, மோட்டார் சைக்கிளில் படையினரைச் சுமந்து செல்லுதல் உட்பட பல சாகச நிகழ்வுகளின் ஒத்திகையில் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

துரையப்பா விளையாட்டரங்கின் மேல் உலங்கு வானூர்தி ஒன்று அந்தரத்தில் நின்றவாறு படையினரை இறக்கியதைப் பெருமளவு மக்கள் வியப்புடன் பார்த்ததை அவதானிக்க முடிந்தது.

பலாலி படைத்தளத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த சாகச நிகழ்வுகளின் ஒத்திகை நிகழ்வுகள் தொடர்ந்தும் படையினரால் நடத்தப்பட்டு வருகின்றது. (பா)

### பிந்திய செய்தி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக் கெதிரான பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ள இந்தியாவின் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யுமாறு இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# கைப்பணிப் பொருட்களின் கண்காட்சி தயாராகி வருகிறது வடக்கு மாகாணம்





(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய அருங்கலைப் பேரவையினால் நடத்தப்படவுள்ள மாகாண மற்றும் தேசிய மட்டத்திற்கான கைப்பணிப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான தயாரிப்பு வேலைகள் தொடர்பான விசேட செயலமர்வு ஒன்று நேற்று நடைபெற்றது.

யாழ். மாவட்ட தொழில் துறைத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் தொழில்துறை திணைக்கள இணைப்பாளர் திருமதி பொலின் பெனராஜ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கலாசாரம் மற்றும் தொழில் நுட்பம் ரீதியான படைப்புக்களை படைக்க வேண்டும்.

களிமண் உற்பத்திகள், தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள், தும்பு வடிவமைப்புக்கள், பிரம்பு, மூங்கில், உலோக கைப்பணிப் பொருட்கள், ஆபரணங்கள், முகமூடிகள் மற்றும் பாவைகள், பற்றிக் வகைகள், ரேந்தை, வெண்கலம் மற்றும் சேசத் உற்பத்திகள், மர உற்பத்திகள், தோற் பொருட்கள், வரைபுகளும் சிற்பமும், பாரம்பரிய கலைகள், தென்னை, கித்துள், எள்ளு, பனை சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருட்கள் ஆகியவற்றின் மூலம் தயாரிக்கப்படும் கைப்பணிப் பொருட்களை 'ஷில்ப 2012' கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இக்கைப்பணிப் பொருட்களில் தரமானதும், பாரம்பரிய கலைகளையும், பண்டைய கலாசாரத்தினையும் எடுத்துக்காட்டும் சிறந்த படைப்புக்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

55 படைப்புக்களில் காட்சிப் படுத்தப்படும் படைப்புக்களுக்கு 19 சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. இதில் முதல் 2 இடங்களைப் பெற்றுக்கொள்ளும் கைப்பணிப் பொருட்கள் தேசிய மட்டத்திற்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

தேசிய மட்டத்தில் காட்சிப் படுத்தப்படவுள்ள கைப்பணிப் பொருட்கள் தங்கப் பதக்கம் பெறக்கூடிய சிறந்த படைப்புக்களாக அமைதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

இச்செயலமர்வில் தேசிய அருங்கலைப் பேரவையின் மாகாணப் பணிப்பாளர் கமால், தேசிய அருங்கலைப் பேரவையின் காட்சிப்படுத்தப்படும் கலைப் பேராசிரியர் சுசிரபால மலிங்க பெடா மற்றும் யாழ். மாவட்ட தொழில்துறை திணைக்களப் இணைப்பாளர், திருமதி பொலின் பெனராஜ் உட்பட தொழில்துறை திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற் பயிற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எஸ்)

# 'முல்லைமுகி' நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் 'முல்லைமுகி' நூல் வெளியீட்டு விழாவும் நேற்றுக் காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக களனி பல்கலைக்கழக பேராசிரியர் ஸ்ரனிஸ்லோஸ் ஜோசப் கலந்துகொண்டார்.

நூலின் முதற்பிரதியை இ.சு. முரளிதரன் வெளியிட்டுவைக்க கரைதுறைப்பற்று முன்னாள் மரண விசாரணை அதிகாரி செபமாலை செபமணி (இலங்கைநாதன்) பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி உள்ளிட்ட கல்வித் துறைசார்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலையில் கல்வி கற்று கல்வியிலும் விளையாட்டிலும் சாதனை படைத்த மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (04)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் 5 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிதியத் தலைவர் எம்.எம்.சர்வானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அமரத்துவமடைந்த நிதிய அங்கத்தவர்களுக்கான மௌன அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஓய்வூதிய நம்பிக்கை நிதியத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், சமூக சேவை உத்தியோகத்தர் செ.புரட்சிதாஸன், வலி. மேற்கு ஓய்வூதிய நம்பிக்கை நிதியச் செயலாளர் சிவரஞ்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (104)

# பள்ளி மாணவியுடன் வல்லுறவு தெல்லிப்பளை இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

14 வயது பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய இளைஞர் ஒருவரை தெல்லிப்பளை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்து யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதாக அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தெல்லிப்பளை நாமகள் வீதியைச் சேர்ந்த புஸ்பராசா நிக்சன் (வயது - 23) என்ற இளைஞரே மேற்படி குற்றத்திற்காக தெல்லிப்பளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் பொலிஸில் கொடுத்த முறைப்பாட்டை அடுத்தே குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மாணவியும் நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் குறித்த நபர் மல்லாகம் நீதிமன்றில் பொ[illegible]லிஸாரினால் ஆஜர்படுத்தப் ப[illegible]தப்படவுள்ளதாகவும் தெரிய[illegible]வருகின்றது.

இதேவேளை நேற்று குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி சி.சிவரூபன் மேற்படி மாணவி குறித்த இளைஞரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டிருப்பதனை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் மேலும தெரியவருகின்றது. (பா)

# சாஜன் சுவாமிகள் குருபூசை இன்று

யாழ்ப்பாணம் நீதிமன்றில் சாஜனாகப் பணியாற்றிய தும்பளையை சேர்ந்த சின்னத்தம்பி, கடையிற்சுவாமிகளின் செயற்பாட்டால் அவரின் சீடரானார். மக்கள் அவரை அன்றிலிருந்து சாஜன சுவாமி என்று அழைத்தனர்.

ஈழத்தில் கடையிற்சுவாமியில் இருந்து ஆரம்பிக்கும் சித்தர் பரம்பரையில் இவர் இரண்டாவது சித்தராவார். இவர் கந்தர் மடம் குமாரசாமி வீதியில் உள்ள சிவகுருநாதபீடம் என்று அழைக்கப்படும் இடத்தில் இருந்து ஆன்மீகப் பணி ஆற்றிக் கொண்டிருந்தார். இவர் 1908 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தில் சமாதியடைந்தார். அன்றிலிருந்து வருடாவருடம் சிவகுருநாத பீடத்தில் (வேதாந்தமடம்) அதே தினத்தில் குருபூசை கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இன்று சாஜன் சுவாமிகளின் குருபூசை தினமாகும்.(26)

# ஈழத்துச் சிதம்பரத்தில் பங்குனி மஹோற்சவம்

(காரைநகர்)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன்கோயில் பங்குனி மஹோற்சவ விழா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சுவாமி இடப வாகனத்தில் வீதியுலா வரும் காட்சியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

2.04.2012 மாலை 7.00 மணிக்கு எம்பெருமான் பரிவார மூர்த்திகளுடன் ஐயனார் வேட்டைக்கு எழுந்தருளும் காட்சியும் 03.04.2012 எம்பெருமான் பெரிய சப்பரத்தில் வீதியுலா வரும் காட்சியும், 04.04.2012 புதன்கிழமை 9.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சோமஸ்கந்தர் பரிவார மூர்த்திகளுடன் எழுந்தருளி பஞ்சரத பவனி இடம்பெறும்.

5.04.2012 வியாழக்கிழமை 7.00 மணிக்கு நடேசர் உற்சவமும் காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 7.00 மணிக்கு கொடியிறக்க வைபவமும் நடைபெறும. மறுநாள் காலை 10.00 மணிக்கு அம்பாள் எழுந்தருளி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வீற்றிருப்பார். மாலை 5.00 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம்பெற்று எம்பெருமான் சௌந்தராம்பிகை சமேதராக அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். தினமும் காலைத் திருவிழா 8.00 மணிக்கும் மாலை திருவிழா 4.00 மணிக்கும் ஆரம்பமாகும். திருவிழாக் காலங்களில் மாணிக்கவாசகர் மடாலயத்திலும் அறப்பணி நிலையத்திலும் மகேஸ்வர பூசை இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் சேவை இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# ‘சுகவாழ்வே யோகாசனம்' விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்கு ஆனைக்கோட்டை உப அலுவலக பொது நூலகத்தின் ஏற்பாட்டில் 'சுகவாழ்வே யோகாசனம்' விழிப்புணர்வுச் செயற்பாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆனைக்கோட்டை சித்த ஆயுர்வேத வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி எஸ்.சரஸ்வதி கலந்துகொண்டு இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளார். (104)

# இரதோற்சவம்

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்பாள் ஆலய இரதோற்சவம் இன்று காலை இடம்பெறவுள்ளது.

காலை வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் தேரில் ஆரோகணிக்கும் காட்சி இடம்பெறவுள்ளது. (50)

# மாதாந்தப் பொதுக்கூட்டம்

யாழ். மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டு மாசி மாதம் நடைபெற்றிருக்க வேண்டிய 2 ஆவது (மாசி மாத) மாதாந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் அம்மாதம் நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டதால் அக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1326)


# பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கோவளம் புகலி சிவசுப்பிரமணியர் ஆலயம் அமைக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெறச் செய்வதற்காக நாளைமறுதினம் முருகப் பெருமானுக்கு பாலஸ்தாபன கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து திருப்பணி வேலைகள் நடைபெறும்.

எதிர்வரும் வைகாசித் திங்கள் 19 ஆம் திகதி 01.06.2012 வெள்ளிக்கிழமை ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவுள்ளது. (50)

நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்! இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச்சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்.

- சுவாமி விபுலானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வாசிப்பின் வழியாக வாழும் திறன்!

வாசிப்புப் பழக்கம் அருகி வருவது இன்று பொதுவாகத் தெரியும் குறைபாடு. அதற்குக் காரணங்களும் உண்டு. தொலைக்காட்சி, வீடியோ கேம்ஸ் இல்லாவிட்டால் பாடப் படிப்பு ரியூஷன் என்று சிறுவர்களின் நேரம் வாசிப்புக்கு ஒதுக்க முடியாததாகவே ஆகிவிட்டது. பெரியவர்களுக்கும் நேரமில்லை. கதை கேட்கும் பழக்கமும் கிட்டத்தட்ட வழக்கொழிந்து வருகிறது.

கதை கேட்பதன் மூலமும் வாசிப்பதன் மூலமும் குழந்தைகள் கற்பனை செய்யப் பழகுகிறார்கள். இதுதான் அவர்களைச் சுயமாகச் சிந்திக்கவும் கற்றுக் கொடுக்கிறது. நம் சிந்தனை உருவாகி வருவதே சிறு வயதில் கேட்ட வாசித்த கதைகளின் வழியாகத்தான் என்பதை இன்று மொழியியலாளர்கள் விளக்குகிறார்கள்.

"மொழிதான் நமக்கு உலகத்தை அளிக்கிறது. உலகத்தைக் கட்டமைக்கும் வழிவகையாக மொழி இருக்கிறது" என்கிறார் நீட்ஷே. மொழியினூடாகவே பண்பாடும் பழக்கங்களும் மொத்த மானுட வரலாற்றின் சேகரமும் நமக்குக் கடத்தப்படுகிறது. கதைகள் இலக்கியங்களைப் புறக்கணிப்பதால் நாம் கலாசாரத்தையே இழக்கிறோம் என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் அறியாமலே கூட நமக்குள் மாற்றங்களை ஏற்படுத்துவதில், நமது ஆளுமை உருவாக்கத்தில் கலை இலக்கியங்களின் பயன்பாடு இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. கலைகள் இல்லாமல், கதைகள் இல்லாமல் மனிதகுலம் இன்றைய நிலைக்கு வளர்ந்திருக்க முடியுமா என்று கேட்டால், இல்லை என்பதுதான் பதில்.

மனிதமனம் எப்போதெல்லாம் பயமும் திகைப்பும் கொள்கிறதோ, எப்போதெல்லாம் சந்தோஷமும் கொண்டாட்டமும் கொள்கிறதோ, எப்போதெல்லாம் துக்கமும் நிர்க்கதியும் கொள்கிறதோ அப்போதெல்லாம் அவை கதைகளைச் சிருஷ்டிக்கின்றன. இப்படித்தான் கதைகள் உலகிற்கு வந்திருக்க வேண்டும் என்கிறார்கள். மனிதமனம் தோன்றியபோதே கதைகளும் தோன்றி விட்டன என்பதுதான்.

இலக்கியம் மனித வாழ்வைப் பண்படுத்தியிருக்கிறது; மனிதனை மேம்படுத்தியிருக்கிறது; மனிதனாக வாழச் செய்திருக்கிறது. நிதானமாக யோசித்தால் இதை நாம் ஒவ்வொருவரும் உணர முடியும். பண்பாடு என்பதே நாம் பழகி வந்த கலைகளதும், அழியாத சொற்களதும் தொகுப்புத்தான். மனிதன் தன்னை மேலும் மனிதனாக்கிக் கொள்வதற்கான ஆக்கத்திறன்களை அவை வழங்கியிருக்கின்றன.

அடுத்த மனிதரை எந்த விதத்திலும் இம்சிக்கக் கூடாது. நமக்கிருக்கும் இன்பங்கள், துன்பங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், சலிப்புகள், சங்கடங்கள் எல்லாமே ஒவ்வொரு மனிதருக்குமானவைதான். பூமியில் வாழவும், சுவாசிக்கவும், கடவுளை வணங்கவும், கஷ்டங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் நமக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமையும் நம் சக மனிதனுக்கும் இருக்கிறது என்பதை உணர்த்திக் கொண்டிருப்பவை இலக்கியங்களே. மற்றவர்களுடன் வாழ்வது என்ற கலையையும் இலக்கியங்களே நமக்கு அளிக்க முடியும்.

மானுட வாழ்வு, பிரபஞ்சத் தோற்றம், மனுக்குலத்தின் அல்லாட்டங்கள், பல்வேறு உயிர்களின் வாதை, சிருஷ்டியின் உள்ளீடாக உறைந்திருக்கும் வன்முறை, பேரழிவு... இவை பற்றிய ஆய்வுப் பார்வைகளெல்லாம் இலக்கியங்கள் நமக்குக் கடத்தித் தந்தவையே. அன்பு, கருணை, அறம் எனப் பல்லாயிரமாண்டுக் கால மரபு உருவாக்கிய விழுமியங்களை நாம் மீண்டும் மீண்டும் கண்டடைதல் இலக்கியங்கள் மூலமாகவே சாத்தியமாகிறது.

துயரத்தை, அவமானத்தை, புறக்கணிப்பை, அநீதியை அனைத்தையும் இனிதாக்கிக் கொள்ளும் ஒரு மாயச் செயற்பாட்டைக் கொண்டிருப்பவை அவை. இலக்கியம் ஒரு சக்தி. நமக்குள் அது வந்து சேர, வாழும் வழி பிடிபடும். தன்னலத்தைப் பின்தள்ளி விடுவதும், பிறர் துயர் துடைக்க இந்த வாழ்வைப் பயன்படுத்துவதுமே உயர்வென்று இலக்கியங்கள் வலியுறுத்தும்.

நம் சிறுவர்கள் நல்ல மனிதர்களாக வளர்வதற்கு, பாடப் புத்தகங்களுக்கு வெளியே தேடி வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துவோம். இது வளர்ந்தவர் ஒவ்வொருவரினதும் கடமை.

– ஆசிரியர்

# பதிவு செய்யாத 11 விடுதிகளை வவுனியாவில் மூடுமாறு உத்தரவு

(வவுனியா)

வவுனியாவில் பதிவு செய்யப்படாமல் இயங்கி வரும் பதினொரு விடுதிகளை மூடுமாறும் மூடிய பின்னர் நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் வவுனியா நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா நகரத்திற்கும் அதனைச் சூழ உள்ள பிரதேசத்திலும் மிகவும் மோசமான நிலையில் தங்குமிடங்களில் நபர்கள் சேர்ந்திருந்து நகரத்திற்கும் மக்களுக்கும் அசௌகரியமான காரியங்களில் ஈடுபடுவதாகவும் மதுப்பாவனை அதிகரித்து காணப்படுவதுடன் விபசாரம், சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாகவும் இவை விடுதிகளில் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டி மனுவொன்றினை நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்த வவுனியா பொலிஸார் இவற்றைத் தடுப்பதற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் பதிவு செய்யப்படாத குறித்த விடுதிகளை மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக மூடுவதற்கு அனுமதி வழங்குமாறு ஆணையை கோரியிருந்தனர். இதனை விசாரணைக்கெடுத்த நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா சிறுவர் துஷ்பிரயோகம், விபசாரம் முறையற்ற சாராய போதைப்பொருள் பாவனை என்பன அதிகரிப்பதாகவும் அவ்வாறு அதிகரிப்பதற்கு நகரசபையின் கீழோ பிரதேச சபையின் கீழோ பதிவு செய்யப்படாத விடுதிகளும் தங்குமிடங்களும் காரணமாக அமைகின்றன என்பதில் அதிருப்தி அடைவதாகவும் குறித்த விடுதிகளையும் தங்குமிடங்களையும் மூடி அறிக்கை சமர்ப்பிக்கும்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் 3 விடுதிகள் வவுனியா தெற்கு பிரதேசசபைக்குட்பட்டும் 8 விடுதிகள் வவுனியா நகரசபைக்குட்பட்டும் உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றை பிரதேசசபை மற்றும் நகரசபைகளின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதேசசபை மற்றும் நகர சபைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட விடுதிகளை அந்தந்த அமைப்புகள் ஊடாக கண்காணிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.(125)

# அகற்றப்பட்ட அங்காடி வியாபாரம் சிரமமின்றிய பயணத்திற்கு வழிபிறந்தது

வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை வெளியேறுமாறு வவுனியா நகரசபையினால் அறிவித்தல் வழங்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமையுடன் காலக்கெடு முடிவடைந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் நகர வீதியோரங்களில் அங்காடி வியாபாரம் நிறுத்தப்பட்டுள்ளதுடன் மக்களின் போக்குவரத்துக்கும்எவ்வித இடையூறு களும் இன்றி வீதிகள் காணப்படுகின்றன.

நகர வீதிகளில் அதிகரித்து வந்த வீதியோர வியாபாரத்தால் மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதுடன் விபத்துக்களும் அதிகரித்துக் காணப்பட்டது. அத்துடன் நடைபாதைகள் அனைத்தும் வீதியோர வியாபாரிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்டது. இதனை அடுத்து வவுனியா நகரசபையினர் நீதிமன்றத்தின் ஊடாக மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக அங்காடி வியாபாரத்தை அகற்றுமாறு கடந்த சில தினங்களாக பொலிஸார் எச்சரிக்கை பிரசுரங்களை வழங்கி வந்தனர். அதனைக் கருத்திற் கொள்ளாதவர்களுக்கு தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்திருந்தனர். இதன் காரணமாக வீதியோர வியாபாரம் அகற்றப்பட்டுள்ளதுடன் வீதிகளில் மக்கள் நடமாட்டத்திற்கு சௌகரியமாகவும காணப்படுகின்றது. (125)

## காணமற் போனவர் கைதானாரா? அறிக்கை கோருகிறது நீதிமன்றம்

அண்மையில் கொழும்பு மேல் நீதிமன்றிற்கு முன்னால் வைத்து கடத்தப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பாதுகாப்பு பிரிவினரின் பிடியில் உள்ளாரா இல்லையா என அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து கடத்தப்பட்ட டபிள்யு.எம்.சந்திரபால என்பவரின் மனைவி தாக்கல் செய்த மனுவை நேற்று பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

காணாமற் போயுள்ள தனது கணவரை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கோரி மனைவியால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பிரதான கட்டளையிடும் அதிகாரி மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

காணாமல் போனவர் கைது செய்யப்பட்டுள்ளாரா இல்லையா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறும் அது தொடர்பில் எதிர்ப்பு இருக்குமாயின் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## வன்னேரிக்குளம் பாடசாலைக்கு அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் நீண்டகாலமாக அதிபர் இன்றி இயங்கி வருவதாக மாணவர்களின் பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்திலிருந்து இப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர் ஒருவரே பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் ஆசிரியர்களும் பற்றாக் குறையாக உள்ளனர்.

பரீட்சைகள் உட்பட கல்வி சார் அனைத்து விடயங்களும் கல்வித்திணைக்களத்திற்குச் சென்றே முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதாகவும், அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அவரூடாக அவற்றை இலகுவாக மேற் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

எனவே இப்பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை கருத்தில் கொண்டு கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகம் இப் பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிக்க ஆவன செய்ய வேண்டும் என மாணவர்களின் பெற்றோர்களும், பாடசாலை சமூகத்தினரும் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

## இந்தியா எதிராக வாக்களித்தாலும் பிரேரணையை முறியடிப்போம்

**அமைச்சர் தினேஸ் குணவர்தன நம்பிக்கை**

இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தாலும், பிரேரணையை வெற்றிகரமாக முறியடிக்க முடியும் என அமைச்சர் தினேஸ் குணவர்தன நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இதே வேளை, பல நட்பு நாடுகள் ஆதரவளிப்பதாக ஏற்கனவே உறுதியளித்துள்ளன.

எனவே, பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் சாதகமான பலன் கிடைக்கும என தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவளிப்பதன் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இலங்கை அரசாங்கம் தனது கொள்கைகளிலிருந்து மாறுபட்டுச் செயற்படாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் கைவிடப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## இரவு நேர மின்தடையால் வவுனியா மக்கள் அவதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இரவு நேரங்களில் ஏற்படும் மின் தடையால் பாவனையாளர்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர். வவுனியாவில் கடந்த காலங்களில் சீராக இடம்பெற்று வந்த மின்விநியோகம் கடந்த இரண்டு மாதங்களாக குறிப்பிட்ட நேரம்வரை தடைப்படுகின்றது. குறிப்பாக மாலை 7 மணிக்குத் தடைப்படும் மின்சாரம் ஒரு மணி நேரத்துக்குப் பின்னரே வழமைக்குத் திரும்புகிறது. இந்த மின்வெட்டால் இப் பகுதியிலுள்ள பிரதான பகுதிகள் பலவும் இருளில் மூழ்குவதோடு பாதசாரிகளும் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர். மேலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

உணவக உரிமையாளர்கள் வர்த்தகர்கள் போன்றவர்களின் நாளாந்த செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் உணவகங்கள் என்பன இரவு 10 மணிவரை திறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தடையால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

## வன்முறையை எதிர்த்து மௌன ஊர்வலம்

மனித உரிமைகள் இல்லமும் தேவை நாடும் மகளிர் அமைப்பும் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைக்கும் முகமாக மௌன ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

இந்த ஊர்வலம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 12 மணிவரை நல்லூர் முருகன் கோவில் முன்றலிலிருந்து யாழ்.மாவட்ட செயலகம் வரை இடம்பெறவுள்ளது. தற்போது யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் சிறுமிகள் மீதான வன்முறைகளால் குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அரச அதிபருக்கு மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளதாக இல்லத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆக்கங்கள் கோரல்

யாழ்எயிட் நிறுவனம் பல்துறை சார்ந்த தற்கால சமுதாயப் பிரச்சினைகளை உள்ளடக்கிய மாத இதழ் ஒன்றை வெளியிடவுள்ளது. இந் நிறுவனம் இதழ் வெளிவருவதற்கு உறுதுணையாக சீர்திருத்தக் கருத்துக்களுடன் அமைந்த சம்பவக் கட்டுரைகள் அல்லது. சமூக அவலங்களின் காரணத்தினால் பாதிப்புக்குள்ளாகிய அனுபவக் கட்டுரைகளை துறைசார்ந்தோரிடமிருந்து கோரியுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் கட்டுரைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் யாழ். எயிட் நிறுவனம், 38,கச்சேரி நல்லூர் வீதி என்னும் முகவரிக்கு அல்லது yorlaid@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிறுவனதிட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

# நல்லூர் பாணன்குள மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்திருக்கும் பாணன் குளத்தைப் புனரமைக்கும் பணிகளில் யாழ்.மாநகரசபை துரிதமாகச் செயற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர்களும் பாணன் குளம் சூழலில் வாழும் மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் குறித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.



மாரி காலங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் தமது வசிப்பிடங்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்த பாணன் குளம் மக்கள் பாணன் குளத்தை ஆழப்படுத்தி புனரமைக்கும் யாழ்.மாநகர சபையின் பணிகளுக்காக தமது நன்றியைத் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின் போது அடிப்படை வாழ்வாதார வசதிகள் அற்றவர்களாக வாழ்ந்து வரும் பாணன் குளம் மக்களின் தேவைகளும் கண்டறியப்பட்டது.

பாணன் குளம் மக்களின் தேவைகளை ஆராயவும், அதை யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் நிர்வாகக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. அத்துடன் முதற்கட்டமாக அப்பகுதியைச் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட இருவருக்கு யாழ். மாநகர சபையில் வேலை வாய்ப்பினையும் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா வழங்கினார்.

விரைவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாணன் குளம மக்களைச் சந்தித்து உரையாடி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழி செய்யப்படும் என்றும், அதுவரை யாழ்.மாநகர சபையால் முடிந்த தேவைகளைப் பூர்த்தி செய்வது என்றும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பாணன் குளம் மக்களுடனான இச்சந்திப்பின் போது யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச பிராந்தியங்களின் முக்கியஸ்தரான விந்தன், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சுப்பிரமணியம் மற்றும் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யோகபுரம் வீதியை புனரமைக்கவும்

(மல்லாவி)

மல்லாவி-யோகபுரம் பழைய பஸ் நிலையத்தின் பினபாகவுள்ள வீதி புனரமைப்பிற்கென கற்குவியல்கள் குவிக்கப்பட்ட நிலையில் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

கடந்த மூன்று மாதகாலமாகத் திருத்தப்படாத நிலையில் இவ்வீதியூடாகப் பயணங்களை மேற்கொள்வோர் சிரமப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இவ் வீதியைத் தென்பகுதி ஒப பந்தகாரர்கள் புனரமைக்காது இழுத்தடிப்புச் செய்து வருவதால் மாணவர்கள், வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் எனப் பலர் இவ்வீதியூடாகச் செல்ல முடியாமல் இருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர். (143)

# பலவந்தமாகக் குழந்தை பறிப்பு, கணவனுக்கு எதிராக மனைவி வழக்கு

(திருநெல்வேலி)

மனைவியிடமிருந்து ஐந்து வயதுப் பெண் குழந்தையை பலவந்தமாகப் பறித்துச் சென்ற கணவன் ஒருவர் மீது மனைவியினால் ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


சட்டத்தரணி ஜெயம் தேவி ராயப்பு மூலம் வடமாகாண மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

கணவன் குழந்தையுடன் மன்னாரிலும் மனைவி ஆனைக் கோட்டையிலும் வசிப்பதாகவும் மன்னாரில் வசித்து வந்த இக் கணவன் மனைவி இடையே அடிக்கடி குடும்பப் பிரச்சினைகள் ஏற்பட்டு இவர்கள் பிரிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்த கணவன், மனைவியிடமிருந்து குழந்தையைப் பலவந்தமாக எடுத்துச் சென்றதால் மனைவி யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

மனைவியை விசாரித்த வடமாகாண மேல்நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில் குழந்தையுடன் ஆஜராகுமாறு கணவனுக்கு கட்டளை பிறப்பித்து உத்தரவிட்டார். (137)

## இடிந்து விழும் நிலையில் துணுக்காய் வௌவால் பாலம்



(மல்லாவி)

துணுக்காய் கொத்தம்பியார் குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள வௌவால் பாலம் பல காலமாகத் திருத்தப்படாமல் பொறிந்து விழும் நிலையில் பல உயிர்களைக் காவு கொள்ளக் காத்திருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மாங்குளம்-துணுக்காய் பி-269 பிரதான சாலையில் அமைந்த கொத்தம்பியார் குளம் வௌவால் பாலம் எவ்வித திருத்த வேலைப்பாடுகள் இன்றிக் காணப்படுகிறது. தற்போது மக்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருவதுடன் வீட்டுத்திட்டப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதனூடாக கனரக வாகனங்கள் சென்று வருவதால் எப்போது பொறிந்து விழும் என மிக அபாயமான நிலையில் காணப்படுகிறது.

இந்த நிலையில் போருக்கு முன்பும், போருக்குப் பின்பும் பால வேலைகள் நடைபெறவில்லை. இதனைத் திருத்துவதற்கு நீர் ஓடி குழாய்களை தருவித்த போதும் எவ்வித செயற்பாடுகளும் நடைபெறவில்லை.

எனவே இப்பாலத்தைச் சீரமைத்துத் தருவதற்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா என இதனூடாகப் பயணிப்போர் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர். (143)

## நடமாடும் நூலக சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் சரசாலைப் பொது நூலகத்தால் நடமாடும் நூலகச் சேவை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு மட்டுவில் கண்ணகை முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்படி நூலக சேவையில் சகல பொதுமக்களையும் கலந்து பயன்பெறுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (11)

## அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர் சேவையின் 1,2-I, 2-II மற்றும் 3 ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை எதிர்வரும் ஜுன் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளதுடன் இதில் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், பாடசாலைகளின் நிதி நிர்வாகம், கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை ஆகிய பாடத்திட்டங்களின் கீழ் வினாக்கள் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சை மும்மொழிகளிலும் நடைபெறவுள்ளதுடன் விண்ணப்பதாரி தாம் தோற்றும் மொழி பற்றிக் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணபபப்படிவத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப்பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாண கல்விப்பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், பெலவத்தை பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை 16.03.2012 வர்த்தமாணியிலோ அல்லது தினமுரசுக் காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

# பருத்தித்துறை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டமட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள்,

**பா-ஓதல் பிரிவு -1**

நா.விபுகா -யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி, யோ.டிவின்சிகா - பரு.சித்தி விநாயகர் வித்தி, ப.விபுஷா - புற்றளைம.வி.

**பிரிவு - 2**

ஈ.தனுசாளினி - யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சி.சாரங்கன் - ஹாட்லிக் கல்லூரி, தி.சுபாஸ் - பரு.சித்தி விநாயகர் வித்தி.

**பிரிவு - 3**

தே.இலக்ஷிகா - யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ம.இராகவன் - ஹாட்லிக் கல்லூரி, த.உஷாலினி - தொண்டைமானாறு ம.வி.

**பிரிவு - 4**

க.ஜெனித்தா - யாழ்.வட இந்து மகளிர் கல்லூரி, உ.அபிராமி - தொண்டைமானாறு ம.வி, ப.கஜலட்சுமி - புற்றளை ம.வி.

**பிரிவு - 5**

ச.பிருந்தா - யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு - கதை கூறல்**

**பிரிவு - 1**

ஞா.சௌந்தர்யா - சென். தோமஸ் றோ.க.பெ.பாடசாலை, ஸ்ரீ.வேணுஜா - தும்பளை சிவப்பிரகாச வித்தி, இ.விவேகன் - பரு.சித்தி விநாயகர் வித்தி.

**திறந்த போட்டி**

**மேடை நாடகம்**

ஹாட்லிக் கல்லூரி.

**விவாதம்**

யாழ்.வேலாயுதம் ம.வி, அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை, சென்.தோமஸ் றோ.க. பெ.பாடசாலை.

**வில்லுப்பாட்டு**

ஹாட்லிக் கல்லூரி, தும்பளை சிவப்பிரகாச வித்தி.

(109) (முற்றும்)

# தொடர்ச்சியான கடும் வெப்பத்தால்; கிளிநொச்சியில் குடிநீருக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இம் மாவட்டத்தில் உள்ள தொண்டமான்நகர், உதயநகர், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம் போன்ற இடங்களில் தண்ணீருக்கு அதிக தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால் பொது மக்கள் இவற்றைப் பெறுவதில் பல சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இங்குள்ள கிணறுகளில் சடுதியாக நீர் வற்றிச்செல்வதாகவும், இதனால் குடிநீர் தவிர்ந்து ஏனைய தேவைகளுக்கும் நீரின்றி தாம் கஷ்டப்படு வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேசசபைக்குட்பட்ட இக்கிராம மக்கள் குடிநீரைப் பெற்றுத்தருமாறு பிரதேச சபையிடம் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்திற்கு முன்னர் பொது அமைப்புக்களால் அமைக்கப்பட்ட கிணறுகளும் உப்பு நீராகக் காணப்படுவதுடன் புனரமைக்கப்படாமல் இருப்பதாகவும், தெரிவிக்கும் மக்கள் இவற்றை புனரமைக்க சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் முன்வரவேண்டும எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதைவிட குடிநீருக்கு தூர இடங்களுக்குச் சென்றே பெற்றுக்கொள்வதாகவும், குடிநீர மட்டுமின்றித் நீர் தேவையைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் தற்காலிகமாவது நீர்வசதியை ஏற்படுத்தித் தருமாறு இக் கிராம மக்கள் கோரிககை விடுக்கின்றனர். (77)

# திறந்த வெளியரங்கு புனரமைக்கப்படுமா?



(மல்லாவி)

முல்லை மாவட்ட துணுக்காய் பிரிவுக்குட்பட்ட யோகபுரம் மத்தியில் 2005ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம் பற்றைக்காடுகளினால் சூழப்பட்டு கட்டட தளபாடங்களின்றி கவனிப்பார் இன்மையால் பாழடைந்து காணப்படுகின்றது.

மேற்படி யோகபுரம் மத்தியில் அமைந்த திறந்த வெளியரங்கும் விளையாட்டு மைதானமும் சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளன. தற்போது கட்டடம் பராமரிப்புகள் இன்றி பற்றைக்காடுகளாக இன்னும் காட்சி தருகின்றது.

இதனைப் புனரமைத்தால் எமது கிராமத்தில் கலை நிகழ்வுகள் தொடக்கம் விளையாட்டுப்போட்டிகள்வரை நடத்த சிறந்த மைதானமாகக் காணப்படும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.இதனை திருத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (143)

# கோலப்போட்டியில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கோலப்போட்டியில் தரம் 6 - 7 மாணவர்களில் 10 மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

தரம் 6இல் ந.துசியா - யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை, இ.நவநந்தினி - யா/உசன் இராமநாதன் ம.வி, ப.பவினயா - யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாசாலை, க.அர்ச்சனா - யா/நுணாவில் மேற்கு அ.த.க பாடசாலை, த.ஜெனனி - யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை.

தரம் 7இல் க.நிக்ஷன் - யா/மீசாலை வீரசிங்கம் ம.வி, ந.சானுகா - யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, பா.கீர்த்தனா - யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை, வி.ஜிதுர்ஷா - யா/வரணி மகா வித்தியாலயம், சி.நிதர்சன் - யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்.

# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு திருக்குறள் மனனப் போட்டி

(பருத்தித்துறை)

ஆரம்பகல்விப் பிரிவு மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்யும் பொருட்டு வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு திருக்குறள் மனனப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இதன்படி தரம் ஒன்று மாணவர்களுக்கு அன்புடமை, கல்வி, ஆத்திசூடி (முதல் 10 அடிகள்) தரம் 2 மாணவர்களுக்கு செய் நன்றி அறிதல், கேள்வி, ஊக்கமுடமை, ஆத்திசூடி(11-20அடிகள்) தரம்-3 மாணவர்களுக்கு அடக்கமுடமை, கல்லாமை, பண்புடமை, ஆத்திசூடி(21-30 அடிகள்) ஆகிய அதிகாரங்களிலுள்ள குறட்பாக்களை மனனம் செய்ய வேண்டும்.


தரம்-4 மாணவர்கள் அறன் வலியுறுத்து, ஒழுக்கமுடமை, மருந்து, சான்றாமை, ஆத்திசூடி(31-45 அடிகள்வரை) கொன்றை வேந்தன். தரம்-05 மாணவர்கள் அதிகாரம்-1,2,3,4,5 அத்துடன் புறங்கூறாமை, புகழ், வாய்மை, பெருமை, உழவு, ஆத்திசூடி (41-58 அடிகள்) கொன்றை வேந்தன் (21-38 அடிகள்) ஆகியவற்றை மாணவர்கள் மனனம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தரத்திலுள்ள மாணவர்களுக்கு குறிப்பிட்ட அதிகாரங்களில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு அதில் வரும் அதிகாரத்தை மனனம் செய்ய வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் யூலை மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் போட்டிகளை நடத்தி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்களைக் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைகக்கப்பட வேண்டும்.

கோட்டமட்ட போட்டிகளை யூலை 31ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி அதிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் விபரங்களை வலயத் திற்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன அறிவித்துள்ளார். (109)

## பரமர் சங்கமம்



மனித வாழ்வில் முதுமை என்பது மதிக்கத்தக்க ஒன்றுதான். அதற்குக் காரணம் வாழ்வில் பட்ட பல்வேறு அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டிருப்பதால் பட்டறிவு மிக இருக்கும். அந்தப் பட்டறிவைப் பெற்று தமது வாழ்வியலை அழகாக அமைத்துக் கொண்டு இளையோர் வாழ்ந்த காலமும் ஒன்றிருந்தது.

இன்றைய சூழல் அப்படியா? முதுமையானவர்களை 'சிக்ஸ்ரி ', 'நைன்ரி ' எண்டு பகிடி விடுகிற நிலைமைதான் வந்துள்ளது. அது அந்தக் காலங்களிலும் இருந்திருக்க வேண்டும்.

இல்லாட்டில் 'காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும் ' எண்ட முதுமொழி தோன்றி இருக்காதல்லவா? குழந்தையாகப் பிறக்கும் மனிதன் திரும்பவும் முதுமையில் குழந்தையாக மாறிவிடுகின்றான் என்று சொல்லப்படுகிறது.

குழந்தையைப் பெற்றோர் உற்றார் உறவினர் எண்டில்லாமல் சகலருமே செல்லம் கொஞ்சி கதைகேட்டு சினக்காமல் தூக்கி வைத்துப் பராமரிப்பார்கள்.

முதுமை வந்துவிட்டால் அப்படியா சீராட்டுகின்றார்கள்; பாராட்டுகின்றார்கள். வேண்டாம் சினக்காமல் பார்த்தாலே தேவலை. 'வீட்டுக்குப் பாரமா வந்திட்டுது' என்டல்லவா வைகிறார்கள்.

பரமருக்கு ஒரு சிந்தனை ஓடியது. மனிதன் பிறந்து வளர்ந்து முதுமை அடைந்து மரணிக்கலாம். அதுவரை நோய் நொடி வந்து இந்த உடலத்தைப் பாதிக்காமல் இருக்க படைத்தவன் ஆக்கக்கூட்டிதாவெண்டுதான்.

அப்படியானால் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எண்ட முதுமொழி தமிழில் தோன்றியிருக்காதல்லவா? 'வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப் போகுமெண்டு' சொல்வார்கள்.

அவ்வாறு வாய் விட்டுச் சிரித்தாலும் மனநோயாளி எண்டும் கழித்துக்கட்டி விடுவார்கள். 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' எண்டதுக்கமைய ஆறில் செத்துவிட்டால் ஒரு தொல்லையுமில்லை.

நூறு வயது வாழ்வதெண்டதுதான் சிக்கல். நாற்பது வயதிலேயே நாய் படாப்பாடு படுகின்ற நிலைமை தோன்றி விடுகின்றது. இருபது, முப்பதுகளில் உறுதியோடு திகழும் உடலம் ஐம்பது, அறுபதுகளுக்கு அப்பால்...

தொப்பை தோன்றி, கால்கள் சவண்டு நிமிர்ந்து நிற்பதில் இருந்து நடக்கின்ற வரையில் எல்லாமே தலைகீழாக மாறிப் பார்ப்பதுக்கே அவலட்சணமாக மாறிவிடுகிறது மனித உடல்.

அப்படி இல்லாமல் குழந்தையாகப் பிறந்து வளர்கின்ற மனிதன் ஆரோக்கியசாலியாக வாழ்ந்து ஐம்பதிலோ, எண்பதிலோ, நூறிலோ ஆயுள் முடியும் வரையில் இருக்கக்கூடாதா?

பத்து நாட்களுக்கு முன்பாகப் பார்த்த ஒருவரை திரும்பக் கண்டபோது மனதையே பிழிந்து விட்டது. அவரது முன்வாய் கீழ்முரசு தாமரைப் பூப்போல பூத்து சொண்டைத் தள்ளிக்கொண்டு முன்னுக்கு நிக்குதுதெண்டால் பாருங்கோவன்? புற்றுநோயாம்.

இதுகள் மனிதனைச் சூழாத உலகம் எப்ப தோன்றும் என்பது தான் பரமரைப்போட்டு வாட்டுதுங்கோ........

# அதிபர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு 6 அதிபர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி திருமதி பு.மங்களேஸ்வரன் - யா/கொடிகாமம திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலைக்கும், வி.கணபதிப்பிள்ளை யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியசாலைக்கும், ப.கதிர்காமசோதிலிங்கம் - யா/கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பரமேஸ்வரன் யா/தனங்கிளப்பு அ.த.க.பாடசாலைக்கும், வை.நாகநாதன் யா/குடமியன் அ.த.க.பாடசாலைக்கும், க.தேவநேசன் யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி ஜனசக்தி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டதுடன், தலைவராக இ.கஜேந்திரன, செயலாளராக இ.கண்ணதாஸ், பொருளாளராக த.நிரோஜா, உபதலைவராக வெ.தேவராசா உப செயலாளராக இ.தர்மலிங்கம் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 8 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்


(21.03.2012 –புதன்கிழமை)

கர வருஷம் பங்குனி மாதம் 08 ஆம் திகதி. சதுர்த்தசி முன்னிரவு 7.33 வரை.
நட்சத்திரம் சதயம் முற்பகல் 9.17 வரை. சித்தாமிர்தம்.
இராகுகாலம் 12.17 - 1.47 வரை. சுபநேரம் 4.47 - 6.17 வரை.
எமகண்டம் 7.47 - 9.17 வரை. குளிகை காலம் 10.47 - 12.17 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | விடாமுயற்சி, முன் எச்சரிக்கை அவசியம், திருப்பணிகளில் நாட்டம், பதவியுயர்வு. |
| ரிஷபம் | ஞாபகமறதி, உறவினர் மனஸ்தாபம், பெரியோர் நட்பு, அலைச்சல் மிகுதி. |
| மிதுனம் | செலவு அதிகரிப்பு, சகோதரரால் அவஸ்தை, ஆன்மீக ஈடுபாடு, உடல்நலனில் கவனம். |
| கடகம் | முயற்சி கூடாது, குடும்பவளம் உயரும், புத்திரரால் செலவு, மௌனம் உத்தமம் |
| சிம்மம் | நண்பர்கள் உதவி, தடைகள் விலகும், விரும்பிய இடமாற்றம். பணவரவில் திருப்தி. |
| கன்னி | நண்பரால் தொல்லை, இருப்பிடபோட்டி, வெளியூர் பயணம், அதிர்ஷ்டம் கைகூடும். |
| துலாம் | திடீர் நன்மைகள், பொறுப்பேற்க வேண்டிவரும், அவதானம் தேவை, இறைவழிபாடு. |
| விருச்சிகம் | பதவி உயர்வு, செல்வம் பெருகும், வேலைப்பளு குறையும், காரியனுகூலம். |
| தனுசு | ஏமாற்றங்கள், எதிர்ப்புகள் நீங்கும், கௌரவமான பதவி கிடைக்கும், திருமணம் கைகூடும். |
| மகரம் | குடும்பசுகம், பொருள் வரவில் திருப்தி, பதவி உயர்வு கிடைக்கும், பயண அலைச்சல். |
| கும்பம் | தனகாரிய வரவு, புதியமுயற்சிகளில் வெற்றி, குடும்பத்தில்குதூகலம், கடன்தொல்லை குறையும். |
| மீனம் | நன்மைகள் கிட்டும், உடல் ஆரோக்கியம் பாதிக்கும், குடும்பத்தில் ஒற்றுமைக்குறைவு. |

# அமெரிக்காவுக்கு இதைச் செய்ய அதிகாரம் கிடையாது



**டெக்கான் குரோனிக்கல் இதழில் வெளியான துக்ளக் ஆசிரியர் சோ ராமசாமியின் பேட்டியிலிருந்து.**

**கேள்வி:**
இங்குள்ள மற்றும் உல கெங்கும் உள்ள தமிழ் கட்சிகள், ஐ.நா மனித உரிமைச் சபையில் இலங்கைக்கு எதிரான அமெ ரிக்காவின் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றன. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** அமெரிக்காவின் தீர்மானம் இவர்கள் நினைப்பதைப்போல, இலங் கையை கண்டிக்கவில்லை என்பதை இந்த மனிதர்கள் உணர்ந்திருக்கிறார் களா என்பது எனக்குச் சந்தேகமே. அந்த தீர்மானம் கூறுவது, தென்னாபிரிக் காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினைப் போல, கொழும் பினால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு (எல்.எல்.ஆர்.சி) என்கிற ஆணைக் குழு தனது அறிக்கையில் கூறியுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று. அமெரிக்காவின் தீர் மானம் மேலும் வலியுறுத்துவது, தமிழர் களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை ஏற்படுத்த வேண்டும் என்பதையும். ஈழக் காரணங்களுக்காக பரிந்து வேண்டு வோர் அதில் எதைக் காண்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**கேள்வி:** இலங்கை நடத்திய போர்க் குற்றங்களுக்காக அவர்கள் ஒரு சர்வ தேச விசாரணையை கோருகிறார்கள் இல்லையா?

**பதில்:** அமெரிக்காவின் தீர்மானம் போர்க்குற்றங்களைப் பற்றி எதுவும் பேசவில்லை. அது மனித உரிமைகள் மீறல்களைப் பற்றித்தான் பேசுகிறது. இலங்கையிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கூட அதைப்பற்றி தங்களது விரக்தியை வெளியிட்டிருந் தன. இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அதை வாசித்தார்களா என்பது எனக்குத் தெரிய வில்லை, ஆனால் இங்கு அத்தகைய ஆக்ரோசமான ஆதரவைக் கோருவதில் ஒன்றுமேயில்லை.

இஸ்ரேலின் அத்தகைய மீறல்கள் பற்றி ஐ.நா மனித உரிமைச் சபை பேசியதற்கு என்ன நடந்தது? அதை எதிர்த்துப் பேசிய அமெரிக்கா, அது அரசியலாக மாறுகிறது என்று சொன்னது. உலகம் முழுவதும் மீறல்கள் நடக்கும் போது இஸ்ரேலை மட்டும் குறி வைப்பது ஏன்? இந்த நாட்டுக்கு மட்டும் நீங்கள் தனியான ஒன்றைச் செய்கிறீர்கள், அது நடக்காது என்று அமெரிக்கா சொன்னது.

அதைத்தான் இந்தியாவும் சொல் கிறது. ஒருவேளை இஸ்ரேலின் மீதுள்ள உலகத்தின் கவனத்தை திசை திருப்பும் நோக்கோடு, மற்ற இடங்களில் கூட மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின் றன என்பதை சாதாரணமாக எடுத்துக் காட்டுவதற்காக வேண்டி அமெரிக்கா இந்த தீர்மானத்தை கொண்டு வந்திருக்க லாம். இந்தியா அதன்மீது ஏன் ஆர்வம் காட்ட வேண்டும்? பரிவு காட்டும் தமிழர் கள் அதில் ஏன் ஆர்வம் காட்ட வேண்டும்.

**கேள்வி:** தமிழ் தேசியவாதம் அளவுக்கு மீறிப் போகிறது என நீங்கள் எண்ணு கிறீர்களா?

**பதில்:** அதில் சந்தேகமே இல்லை. பல வருடங்களாக அப்படி நடைபெற்று வருகிறது. கிளர்ச்சியாளர்கள் எந்த விதி முறைகளையும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் அரசாங்கம் மட்டும் எப்போதும் யுத்தங்களுக்கான சர்வதேச சட்டம் அல்லது விதிகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. இது எப்படி சாத்தியமாகும்? அப்படியானால் எந்த அரசாங்கத்தாலும் பயங்கர வாதத்தை அடக்க முடியாது. அது அப் படி என்றால் நாங்கள் அரசாங்கத்தை பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றா கேட்கிறோம்.

**கேள்வி:** நாங்கள் இதை பின்னோக்கிப் பார்த்தால். இந்தப் பயங்கரவாதம், இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டியதால்தானே உருவானது?

**பதில்:** நீங்கள் சொல்வதை நான் முற்றாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அந்த ஒன்று மட்டும் எல்.ரீ.ரீ.ஈ செய்ததை எல்லாம் நியாயப் படுத்திவிட முடியாது. அமிர்தலிங்கம் தொடங்கி அதன் பின்னான முழுத் தமிழ் தலைவர்களை யுமே அவர்கள் துடைத்தழித்தார்கள். இலங்கை அரசாங்கம் அப்படிச் செய்ய வில்லை. எல்.ரீ.ரீ.ஈ முஸ்லிம்களை அவர் களின் மசூதியில் வைத்தே கொலை செய்து அவர்களை முற்றாக ஒழித்துக் கட்டினார்கள். அவர்கள் ஏனைய தமிழ் போராளிக் குழுக்களையும் கூட அழித் தொழித்தார்கள். ஒரு கட்டத்தில், சிங்கள வர்களும் நாங்களும் (இலங்கைத் தமிழர்களும்) சகோதரர்கள், இந்தியா ஒரு அந்நிய நாடு எங்கள் விவகாரங்க ளில் தலையிட அவர்களுக்கு உரிமை யில்லை, என்று கூடச் சொன்னார்கள். ஆனால் இங்கேயுள்ள எங்களுக்கோ அதன் பிறகுகூட வெட்க உணர்வு தோன்றவில்லை.

**கேள்வி:** எல்.ரீ.ரீ.ஈ இந்திய எதிர்ப்பு உணர்வு கொண்டதா?

**பதில்:** நிச்சயமாக. அதனால்தான் அவர்கள் இந்திய அமைதி காக்கும் படையினருக்கு (ஐ.பி.கே.எப்) அங்கு களங்கம் ஏற்படுத்தி அந்த நட வடிக்கை முழுதான தோல்வி அடையும்படி செய் தார்கள். நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், இலங்கையிலுள்ள அனைத்து தமிழர்களுமே ஒற்று மையாக இருக்கிறார்களா? கொழும்பில் உள்ள தமிழர்களும் வடக்கில் உள்ள தமிழர்க ளும் ஒற்றுமையாக இருக்கிறார் களா? கிழக்கில் உள்ள தமிழர்களும் யாழ்ப் பாணத்தில் உள்ள தமிழர்களும் ஒற்றுமை யாக உள்ளார்களா? தமிழ் புலம் பெயர் சமூகம் கூட ஒற்றுமையின்றித்தான் உள்ளது.

உண்மையில் இலங்கை அரசாங்கம் தமிழர்களிடம் நீதியற்ற முறையில்தான் நடந்து கொள்கிறது, அவர்களின் உரிமை கள் மறுக்கப்பட்டுள்ளன, அவர்கள் அங்கு சமத்துவமான பிரஜைகளாக நடத்தப்பட வில்லை. இது இலங்கையால் தீர்க்கப் பட வேண்டியது, போர்க்குணம் அதற் கான தீர்வு அல்ல.

ஒருவேளை அமெரிக்காவோ அல் லது வேறு எந்த நாடோ, நாளை காஷ் மீர் விடயத்திலும் இதேபோன்ற ஒரு பிரேரணைக்கு அனுசரணை வழங்குகிறது என வைத்துக்கொண்டால், நாங்கள் அதை மதிக்கப் போகிறோமா? இதைச் செய்ய அமெரிக்காவுக்கு அதிகாரம் கிடையாது என்றுதான் சொல்லப்போகி றோம்.

**கேள்வி:** இலங்கைக்கு இராணுவ ரீதி யில் இந்தியா உதவி புரிவது குறித்து இந்திய கட்சிகள் எடுத்துவரும் நடவடிக் கைகள் தோற்றத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை போலத் தெரிகிறதே?

**பதில்:** இந்த விடயத்தை முன்வைத்து எந்த ஒரு அரசியல் கட்சியாவது உண்மை யாக முன்வந்து தேர்தலில் போட்டி யிடுமானால் அது கருத்துள்ள ஒரு நிலைப் பாடாக இருக்கும். ஆனால் இலங்கைத் தமிழர்கள் பற்றி தமிழ் நாட்டிலுள்ள கடசிகள் நடத்தும் பிரச்சாரங்கள் வெறும் வாயப்பேச்சே தவிர வேறு ஒன்றுமில்லை.

திராவிட கட்சிகள் மட்டுமல்லாது, சமீபத்தில் பாரதீய ஜனதா கட்சியும் (பி.ஜே.பி), இலங்கை விடயமாக வெளி யிட்டிருந்த அறிக்கை, ஒத்து ஊதும் குழுவினர் மத்தியில் தாங்களும் தமிழர் சார்பு நடவடிக்கையில் இணைவது போலத் தோன்ற வேண்டும் என்பதற் காக வெளியிட்ட "தூய பேச்சு" என்ப தாகத்தான் இருந்தது.

மாநில இந்திய கம்யுனிஸ்ட் கட்சி யினரும் (சி.பி.ஐ), தாங்கள் செய்யக் கூடிய நிலையிலிருந்த போது, அதாவது அரசாங்கத்தில் இணைந்திருந்த போது, எந்தவித தீவிர ஈடுபாட்டோடும் தமிழர் களின் பிரச்சினைகளைப் பற்றி கேள்வி எழுப்பியதில்லை. நேரத்துக்கு நேரம் சி.பி.ஐ, வேறு பல விடயங்களைப் பற்றி யும் மத்திய அரசோடு விவாதித்துள்ளது. அந்த நேரத்தில் சி.பி.ஐ, இலங்கைத் தமிழர்கள் பற்றி ஒருபோதும் பேசியதே யில்லை.

எல்லாம் இருப்பினும், ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சிங்களவர்களுக்குள்ள சம உரிமையுடன் தமிழர்களும் வாழ வேண்டும் என்பதில் தமிழ்நாட்டு மக்க ளிடையே முழு ஆதரவு காணப்படுகிறது என்பது உண்மை.

# இந்தியா செலுத்தப்போகும் மிகப்பெரும் விலை

அமெரிக்கா ஜெனிவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன் வைக்கவுள்ள தீர்மானத்தை, இந்தியா ஆதரிக்கும் என பிரதமர் மன்மோகன்சிங் லோக் சபாவில் அறிவித்துள்ளார். இது அண்மைக்கால வரலாற்றில் இந்தியா அமெரிக்க ஏகாதபத்தியத் துக்கு அடிபணிந்த இரண்டாவது சம்பவமாகும்.

மன்மோகன்சிங் தலைமையிலான முன்னைய காங்கிரஸ் அரசாங்கத்தின் போது, அவ்வரசுக்கு நிபந்தனையுடன் ஆதரவளித்து வந்த இடதுசாரிக் கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, காங்கிரஸ் அரசு அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந் தத்தை விடாப்பிடியாக செய்தது தெரிந்ததே.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, இந்தியாவின் வேறெந்த மாநிலத்தையும் விட தமிழ் நாட்டி லேயே அது நீண்ட நெடுங்காலமாக தனது ஆதரவுத் தளத்தை உருவாக்கி வந்துள்ளது என் பது இரகசியமானதல்ல. அது இலங்கைத் தமிழர் விடயத்திலும் மிகவும் கச்சிதமாகப் பொருந்தும். பொதுவாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் வாழும் தமிழர்கள் அமெரிக்க விசுவாச முள்ளவர்களாகவே அவர்களது அரசியல் தலைமைகளால் வளர்க்கப்பட்டு வந்துள்ளார்கள்.

இலங்கையில் தமிழரசுக்கட்சி போன்ற தமிழ் இனவாத சக்திகளாலும், தமிழகத்தில் பல்வேறு திராவிட சக்திகளாலும் புலிகள் இயக்கம் ஆதரிக்கப்பட்டதும் இதற்காகவே. ஈழ விடுதலை இயக்கங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டும் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளும் சியோனிச இஸ்ரேலும் ஆதரித்ததும் இதற்காகவே.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், இலங்கையைவிட இந்தியாவே வருங்காலத்தில் பாரதூரமாகப் பாதிக்கப்படும். முன்னைய காலங்களில் தி.மு.கவும் அதிலிருந்து பிரிந்த கை.கோபாலசாமி போன்றவர்களுமே அமெரிக்க விசுவாசிகளாக இருந்தனர். இப்பொழுது ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேற்றக்கழக (அ.தி.மு.க) அரசும் வெளிப்படையாகவே அமெரிக்கசார்பு நிலையை எடுத்துள்ளது.

இந்த விவகாரத்தில் மிகவும் கேவலமான ஒரு விடயம் என்னவென்றால், தமிழ்நாட்டில் உள்ள இரண்டு "கம்யூனிஸ்ட" கட்சிகளும் தமது சர்வ தேசியத்துவ நிலையைக் கைவிட்டு தமிழகத்து தமிழ் தேசியவாத பிழைப்பு வாதிகளுடன் கைகோர்த்து இருப்பதுதான். அதிலும் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் து.ராஜாவும், தமிழகச் செயலாளர் தா.பாண்டியனும் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னரே புலிகளை வெளிப்படையாக ஆதரித்துப் பிரச்சாரம் செய்தவர்கள்.

அதுமட்டுமல்லாமல் வலது கம்யூனிஸ்ட் கட்சிக்கு புலிகளின் பணப் பட்டுவாடா தொடங்கிய பின்னரே, ராஜாவும் பாண்டியனும் இந்த மாதிரியான முற்போக்கு விரோத நிலைப்பாட்டை எடுத்ததாகவும் செய்திகள் உண்டு. இந்த விடயத் தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இப்பொழுது வெகுதூரம் தடம்புரண்டு சென்றுள்ளது. அக்கட்சி யின் முக்கிய தமிழ்நாட்டுத் தலைவர்களில் ஒருவரான டபிள்யூ.ஆர்.வரதராஜன் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நிதானமான ஒரு கொள் கையை எப்பொழுதும் வலியுறுத்தி வந்தவர். அவர் தற்கொலை செய்து இறந்த பின்னர், தற்போதைய மாநிலச் செயலாளர் ஜி.இராமகிருஷ்ணன் திராவிடக் கட்சிகளின் தமிழ் தேசியவாதச் சேற்றில் கட்சியை இழுத்துச் செல்கின்றார்.



ஆக, அமெரிக்கா இலஙகைத் தமிழர் பிரச்சி னையை வைத்து தமிழ் நாட்டிலுள்ள கடைக்கோடி வலதுசாரிகளிலிருந்து "இடதுசாரிகள்" வரை எல்லோரையும் தனது வலைக்குள் விழுத்தி யுள்ளது என்பதே தற்போதைய நிலைமை. இதன் மூலம் திரும்பவும் இலங்கையில் தமிழ் தீவிரவாத ஆயுதம் தாங்கிய பிரிவினைப் போராட்டத்தை ஆரம்பிக்கவும், அதைத் தமிழகத்துக்கு விஸ்தரிக்கவும் வழி ஏற்படுத்தப்படும். இதை அண்மையில் அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் தனது கருத்து ஒன்றின் மூலம் கோடிகாட்டியிருக்கிறார்.

இந்தக் கட்டத்தில் இந்தியா, அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான ஜெனிவா தீர்மானத்தை ஆதரிப்பது என எடுத்த முடிவு, இலங்கை 30 வருடமாகத் தனது மடியில் கட்டியிருந்த நெருப்பை, இப்பொழுது இந்தியா வாங்கிக் கட்டிக்கொண்டதற்குச் சமமானது. அதன் மூலம் அது விரைவில் மிகப்பெரும் விலையைச் செலுத்த வேண்டி ஏற்படும்.

**வி.சின்னத்தம்பி கட்டுரையிலிருந்து...**

# ஜெனிவா அமெரிக்கப் பிரேரணை: ஈழத்தமிழர் தொடர்பில் அதன் முக்கியத்துவம்



தி.ஸ்ரீதரன் கட்டுரையிலிருந்து

**ப**ரபரப்புடன் எதிர்பார்க்கப்படும் (ஒரு உலகக் கிண்ணத்திற்கான கிறிக் கெற் மச்போல) அமெரிக்காவின பிரேரணைக்கு எக்கதி நேரும் என்பதே தற்போதைய முக்கியமான கேள்வியாகும்.

இலங்கையில் எல்.எல்.ஆர்.சி.யினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை சாத்தியமாக்கும் படியே ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணை வலியுறுத்துகிறது.

உண்மைகளைக் கண்டறியும் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வருவதில் பிரச்சினை என்று இலங்கை அரசு கையைப் பிசைவதும், பௌத்த சிங்கள இனவாதிகள் - பிக்குகளும் ஆர்ப்பாட்டம் பண்ணுவதும் தான் வினோதமாக இருக்கிறது.

உண்மையில் இதில் ஒரு நாடகத் தன்மை காணப்படுகிறது. எரிபொருள் விலை, மின்சாரக் கட்டண உணர்வு, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, மீனவர்கள், விவசாயிகள், சுகாதாரத்துறை, போககுவரத்து, மின்துறை உள்ளிட்ட தொழிலாளர்கள் அமைதியிழந்து காணப்படுகிறார்கள். "பேழையில் இருக்கும் பாம்பென உயிர்க்கும்" நிலையிலேயே மக்கள் காணப்படுகிறார்கள்.

இதனை சமாளிப்பதற்கு இனவாதம் சக ஜெனிவா அருமருந்தாக காணப்படுகிறது. மின்துறை அமைச்சர் இனக் கலவரம் வரும் சாத்தியம் பற்றி அச்சமூட்டுகிறார். 4000 பௌத்த துறவிகள்(?) ஜெனிவாவிற்கெதிரான தமது சத்தியாக்கிரகத்தை விகாரமகாதேவி பூங்காவில் அரசியல் விளம்பரத்துடன் நடத்துகிறார்கள்.

அமெரிக்கா கேட்பது புதிதாக ஒன்றுமில்லை. அரசினால் நியமிக்கப்பட்ட பெரும்பான்மை சிங்கள புத்திஜீவிகள் சட்ட நிபுணர்கள் கொண்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறைச் சாத்தியமாக்குமாறே.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக படையினரும் விசாரிக்கப்பட வேண்டும், காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்களை தெரியப்படுத்தப்பட வேணடும் என்பவை குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர பகிரங்க இடங்களிலிருந்து இராணுவம் வெளியேறும் என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும், வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லீம் மக்கள் மீளக் குடியேற்றப்படவேண்டும், புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும், உயர்பாதுகாப்பு வலயங்கள் குறைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த பரிந்துரை களை நடைமுறைப் படுத்துவதற்கான பொறிமுறைகளையும் அதன் மீதான கண்காணிப்பு அவதானிப் பையுமே அமெரிக்கப் பிரேரணை வலியுறுததுகிறது.

ஆனால் இலங்கை அரசு அவகாசம் கேட்கிறது.

சுதந்திர இலங்கையின் வரலாறு முழுவதும் இந்த இழுத்தடிப்பு, தமிழர்கள் உட்பட சிறுபான்மைச் சமூகங்களுக்கு நீதி நிலை நாட்டப்படாமலேயே கழிந்திருக்கிறது. நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து வருகிறது.


அகதிகளான 3 இலட்சம் மக்களையும் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றியதிலும் .சரி,

அவசரகாலச் சட்டத்தின் சில பிரிவுகளை நீக்கியதும் சரி, தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததிலும் சரி, உண்மைகளை கண்டறியும் குழுவை அமைத்ததும் சரி சர்வதேச அழுத்த்தின் காரணமாகவே நிகழ்ந்தது.

இந்த நிலையில் இருந்து பார்க்கும் போது அமெரிக்கப் பிரேரணை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. அமெரிக்கா முன்வைக்கிறதென்பதல்ல பிரச்சினை. முன்வைக்கும் விடயம் எந்தளவிற்கு தமிழர்களுக்கு மாத்திரமல்ல, இலங்கை சமூகத்திற்கு, உலகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதே இங்கு சாராம் சமானது.

இலங்கை அரசு குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் சார்ந்ததும், இலங்கையில் ஜனநாயக ஆட்சி சார்ந்ததுமான விடயங்களில் நழுவிக்கொள்ள சர்வதேச சமூகம் இடமளிக்கக் கூடாது.

## ரஹ்மான் இசையில் தனுஷ் பாட்டு!




**இ**சைப்புயல் ஏ.ஆர்.ரகுமானின் இசையில் உருவாகவிருக்கும் "வந்தே மாதரம்" அடுத்த அல்பத்தில் தனுஷ் பாடுகிறார். பட்டிதொட்டி எல்லாம் பட்டையை கிளப்பிய கொலவெறி பாடலை இசைப் புயல் விரும்பிக் கேட்டாராம், "வந்தே மாதரம்" அல்பத்தை இயக்கப் போகும் பரத் பாலா இந்த அல்பத்தில் தனுஷைப் பாட வைக்க ஆசைப்பட்டாராம். இதற்கு ஏ.ஆர்.ரகுமானும் ஒப்புக் கொண்டிருக்கிறார். "இசைப்புயலின் தீவிர ரசிகனாகிய எனக்கு அவருடைய இசையில் அதுவும் "வந்தே மாதரம்" அல்பத்தில் பாட இருப்பது மிகப் பெரிய பாக்கியமாக கருதுகிறேன்" என்று தனுஷ் தெரிவித்துள்ளார்.

சும்மா கொஞ்ச நேரம்

ஏ.கே.

# சீரியலும் நாங்களும்



**இ**ன்றைய நடுத்தர வயதில் இருப்பவர்கள் தங்களது பதின்ம பருவத்தில் "ஒளியும், ஒலி"க்காகவும் ஜெய்ஹனுமானுக்காகவும், காத்துக்கிடந்தவர்களாக இருப்பார்கள்.

அதுவும் தூர்தர்ஷன் ஒளிஅலை சரியாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அன்ரெனாவை அப்படித் திருப்பியும் இப்படித் திருப்பியும் காட்சிகளை தெளிவாக தெலைக் காட்சியில் கொண்டு வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.

இதைவிட ரூபவாஹினி ஒளிபரப்பும் தமிழ் நாடகங்கள், கவியரங்கங்கள் இவற்றிற்கும் ரசிகர்கள் இருந்தனர். நான் நினைக்கின்றேன் 98,99 களில் தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகிய "எத்தனை மனிதர்கள்" என்ற தொலைக்காட்சி தொடர்தான் முதலில் யாழ்ப்பாண மக்களிடையே செலவாக்கைப்பெற்ற தொலைக்காட்சித்தொடர் (சீரியல்) என நினைக்கின்றேன்.

அதன்பின் டிஷ் அன்ரனாக்களும், கேபிள் ரீ.விக்களும் வரத்தொடங்க சீரியல் எண்ணிக்கையும் அதிகரித்தன, அதன் விசுவாசிகளும் அதிகரித்தனர். சித்தி, திருமதி செல்வம், மெட்டி ஒலி என்பன போன்ற மெகா தொடர்களால் ஆக்கிரமிக்கப்பட்டவர்களும் இங்குள்ளனர்.

குறிப்பாக வேலைக்குப்போகும் பெண்கள இரவு நேரத் தொலைக்காட்சித் தெடர்களையும் வீட்டிலிருக்கும் பெண்கள் இரவு பகல் தொலைக்காட்சித் தொடர்களையும் விட்டுவைப்பதில்லை.

தற்போதைய சீரியல்களில் பொதுவானவை அழுகை, யாரையாவது மோசமாகத் திட்டிக்கொண்டே இருப்பது, பெண்களின் செண்டிமெண்ட்கள், ஆண் பெண் தொடர்புகளும் அதற்கான வழிகளும்.

தற்போதெல்லாம் உறவினர்கள் நண்பர்களின் வீட்டுககுப் போனாலும் சரியான கவனிப்போ உபசரணையோ இல்லை. தாங்களும் ரீவி பார்த்துக்கொண்டு வருபவர்களுக்கு ஒரு கதிரையை இழுத்துப்போட்டு உட்கார வைத்துவிடுவார்கள். தொலைக்காட்சியில் மனிதர்களின் சுக, துக்கங்களில் தாமும் கலந்து போக வேண்டியது தான்.

முன்பெல்லாம் கப் அண்ட் சோசரில் தேனீர் அல்லது கோப்பி பரிமாறுவார்கள். குளிர்பானம் எனின் அழகான கிளாசில் பரிமாறுவார்கள். இப்போது இவ்வகையான பரிமாற்றங்கள் மற்றைய பகுதியில் ஓடிக்கொண்டிருக்கும் சீரியலைப் பொறுத்து அங்கு யாரும் மண்டையை போட்டுவிட்டாலோ யாரும் யாருடனோ ஓடிவிட்டாலோ விருந்தினர்பாடு அதோ கதிதான.

இந்த நிலையில் கப் எங்கே சோசர் எங்கே எல்லோருக்கும் பிளாஸ்டிக் கப்பும், சோடாவும் தான். பேசினால் இரண்டொரு வசனங்கள் அல்லது வழமையான சொல்லாடல்கள்- 'இண்டைக்குச் சரியான வெய்யில்...', கத்தரிக்காய் சரியான விலை. அவ்வாறானவை. அதன் பின்னர் விடைபெற வேண்டியது தான்.

எனவே எமது வாழ்வியலை மாற்றும் அளவுக்கு இந்தத் தொலைக்காட்சி தொடர்கள் எமக்குள் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன். அதுவும் கதை தயாராகவில்லை என்றால் காட்சிகளை நன்றாக இழுத்து நேரத்தை நிரப்புவார்கள். நான்கு வரிகளில் சொல்லக் கூடிய ஒரு சுமபவத்தை அரை மணித்தியால திரைக்கதையாக்கி முடிவில் தொடரும்... போட்டு விடுவார்கள்.

இதற்காக ஒரு மினி சமையல் அறையே தொலைக் காட்சி முன்னால் வந்துவிடும். வெங்காயம் உரிப்பது தேங்காய் திருவுவது, காய்கறி நறுக்குவது எல்லாம் தொலைக்காட்சிக்கு முன்னால்தான்.

இந்தச் சீரியல்கள் ஒளிபரப்பாகும் நேரத்தைப் பொறுத்தே வீடுகளில் உணவு வேளைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. மேலும் தொலைக்காட்சியில் இடம்பெறும் சம்பவங்களைப் பொறுத்து வீட்டிலுள்ள பெண்களின் மனிநிலையும் மாறுபடும். சிலவேளைகளில் சிடுசிடு என்று இருப்பார்கள். கேட்டால் எரிந்து விழுவார்கள்... ஆனால் அது வீட்டுப்பிரச்சினையல்ல தொலைக்காட்சித் தொடரிலுள்ள பிரச்சினை குறித்தானது.

சீரியல் குறித்து ஏதோ ஒரு புத்தகத்தில் படித்த நகைச்சுவை ஒன்று ஞாபகம் வருகிறது ஒருவர் சொல்லுவார் தனது மனைவியை சீரியல் பார்க்க விட்டது தப்பாப் போச்சு என்று மற்றவர் ஏன் என்று கேட்க அவர் சொல்லுவார் சீரியல்ல யாரோ இறந்து போச்சினம் இவள் செத்த வீட்டுக்குப் போகவேணும் எண்டு ஒற்றைக்காலில் நிற்கிறாளாம்.

உண்மை தான். அண்மையில் கூட ஒரு தொலைக்காட்சித் தொடரில் பிரதான நடிகரை இறந்ததாக காட்டினார்கள் (அவர் உயிர்த்து வந்தது வேறு...!)

அன்றையதினம் பெரும்பாலான பெண்களுக்கு இரவுச் சாப்பாடு இறங்கவில்லையாம்...!!

இந்தத் தொடர்களையும் இரவு பகல் என்று இல்லாது வேறு வேறு சனல்களில் வேறு வேறு நேரங்களில் ஒளிபரப்புவார்கள் எந்த நேரம் கதவைத் திறந்தாலும் தொலைக்காட்சியிலிருந்து கேட்கும் சத்தம் அவல ஒலிகளும், அழுகை ஒலிகளும் தான். யார் யாருடை யதோ செத்த வீடுகளும், கொலையும், கொள்ளை களும், ஏமாற்றும், சோரம் போதலும் தினம் தினம் எங்கள் வீடுகளுக்குள் நடக்கின்றது இந்தத் தொலைக் காட்சித் தொடர் மூலம்...

வேலையிலிருந்து வீட்டுக்குள் வரும்போது ஐய்யோ.... ஐய்யோ.... நாசமாய்போவாய் ... என்று பலத்த தொனியில் தொலைக்காட்சி அலற அதைத் தூக்கிப்போட்டுடைத்த சம்பவமும் இடம்பெற்றிருக்கின்றது.

பென்சன் எடுத்த பெண் அரச ஊழியர்களினதும் ஏன் சில இடங்களில் ஆண்களினதும் பிரதான பொழுது போக்கு அல்லது வேலை இந்தத் தொலைக் காட்சித் தொடர் பார்ப்பது தான்.

பிள்ளை படிக்குது ரீ.வியை நிப்பாட்டு எண்டு சொன்னது பிரச்சினையாகிப்போய் தீ வைத்துகொளுத்திக்கொண்ட சம்பவமும் யாழ்ப் பாணத்தில் நடந்திருக்கிறது.

உண்மையில் நடப்பது என்ன...? பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்களும் தமது விளம்பரத்தையும் வாடிக்கையாளர்களையும் அதிகரித்துக்கொள்ள இப்படியான தொலைக்காட்சித் தயாரிக்கின்றனர். விறுவிறுப்பையும் காலத்தையும் கூட்டுவதற்காக திருப்பு முனைகளையும் அதிரடியான மாற்றங்களையும் செய்வதோடு பெண்களுக்கே வேண்டிய அயல் வீட்டு விடுப்புக்களையும் அள்ளி வழங்குகிறார்கள்.

பெண்கள் தான் பிரதான பார்வையாளர்கள் என்பதால் பெண்கள் சார்ந்த தயாரிப்புக்கள் சோப்பு, ஷம்பூ, கிறீம், சமையல் பொருட்கள், நகை என்பன சார்ந்த நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு விளம்பர அனுசரணை செய்கின்றன.

கிடைக்கின்ற அவகாசத்தில் கதாசிரியரும், இயக்குநரும் தமது வக்கிர புத்திகளையும், பார்வையாளர்கள் இதனைத்தான் விரும்புகிறார்கள் என்று ஆங்காங்கே திணிக்கின்றார்கள்.


அவற்றை நாமும் ஆவெண்டு பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். இதனால் எமது வீட்டுத்தோட்டம் செய்யும் நேரம், வீடடைச் சுத்தமாக்கும் நேரம், அயலவர்களுடன் கதைக்கும் நேரம், பேரப்பிள்ளைகள், பிள்ளைகளுடன் செலவிடும் நேரம், புத்தகம் படிக்கும் நேரம், பிரார்த்தனை செய்யும் நேரம் என்று எல்லாமே சுருங்கிப் போய் அல்லது ஒழிந்துபோய்க் கொண்டு இருக்கிறது.

முன்பொருகாலம் இதே வெறி சினிமா மீது இருந்தது. ஜெனரேற்றர் போட்டு டெக்கும் ரீவியும் வாடகைக்கு எடுத்து ஒரே இரவில் 05 படம் பார்த்த காலங்களும் உண்டு.

*அன்று சினிமா தமிழராக இருந்தோம்..*
*இன்று சீரியல் தமிழராக இருக்கிறோம்.!*

# ஜெனிவா மோதலைத் தவிர்த்து பொன்சேகாவை விடுதலை செய்க

## முன்னாள் நீதியரசர் ஆலோசனை



(கொழும்பு)

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் மோதல்களுக்கு பதிலாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்குமாறும் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் அரசாங்கத்தை ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வலியுறுத்தியுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான இயக்கத்தின் கருத்தரங்கொன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இவ்வாறு கூறினார்.

இந்நாட்டில் மனித உரிமைகளோ சட்டங்களோ முறையாகப் பின்பற்றப்படவில்லை. அனைத்துச் சட்டங்களுக்கும் முரணாக முன்னாள் இராணுவத் தளபதியைத் தடுத்துவைத்திருப்பது சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனங்களுக்கு முரணானது. இவற்றில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் கைதானது முறைப்படி மேற்கொள்ளப்படாததால் அது சட்டவிரோதமானது. சரத் பொன்சேகாவை கைது செய்வதற்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் உத்தரவிட்டதால் அது சட்ட விரோதமானது. இராணுவ சட்டத்தின்படி கனிஷ்ட அதிகாரியொருவரை சிரேஷ்ட அதிகாரியொருவர் கைது செய்யலாம்.

சிரேஷ்ட அதிகாரி ஒழுங்கீனமாக செயற்பட்டால் கனிஷ்ட அதிகாரியும் அவரை கைது செய்யலாம். ஆனால் சரத் பொன்சேகா விடயத்தில் இது பொருந்தாது. ஏனெனில் கைது செய்யப்படும் போது அவர் இராணுவத்திலிருந்து விலகியிருந்தார்.

ஜனாதிபதி கையெழுத்திட்ட இராணுவ நீதிமன்ற உத்தரவு சட்டப்படி செல்லுபடியாகாது எனவும் சரத் என் சில்வா தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றுகையில், தற்போதைய நிலையில் சர்வதேச சமூகத்தை எதிர்கொள்வதற்கு மிக சிறப்பான நபராக பொன்சேகா விளங்கியிருப்பார். இம்முக்கியமான தருணத்தில் அவரை அரசாங்கம் சிறையில் வைத்திருப்பது ஏன்? அவர்கள் பொன்சேகாவுக்கு ஏன் அவ்வளவு பயப்படுகிறாரகள்? என சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

# பாலச்சந்திரனின் கொலைக்கு புலிகளின் காவலர்களே காரணம்

## கூறுகிறார் தயா மாஸ்டர்



(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த காலத்தில் பதிவு செய்யப்பட்ட ஒளிப்பதிவுகள் திரிபு படுத்தப்பட்டு சர்வதேச ரீதியாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி தெரிவித்துள்ளார்.

சனல் - 4 அலைவரிசையினால் பயன்படுத்தப்பட்ட ஒளிப்பதிவுகளானவை விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட திரிபுபடுத்தப்பட்ட ஒளிப்பதிவுகள் என ஐ.ரி.என். தொலைக்காட்சியில் தயா மாஸ்டர் தெரிவித்தார்.

புலிகளின் தலைவர் பிரபாரகனின் 12 வயதான மகன பாலச்சந்திரன் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாக சனல் - 4 அலைவரிசையின் புதிய வீடியோவில் குற்றம் சுமத்தப்படுவது குறித்து தயா மாஸ்டர் கூறுகையில்,

புலிகளின் காவலர்களின் கடும் பாதுகாப்பில் பாலச்சந்திரன் இருந்ததாகவும் அவர் தப்பியோட முயற்சித்தபோது அவர்களால் சுடப்பட்டிருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு மாதாந்த வருமானம் 7500 போதும்



## அமைச்சர் பந்துலவின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மூன்று பேரினைக் கொண்ட குடும்பமொன்று வாழ்வதற்கு மாதாந்தம் ரூபாய் 7500 வருமானம் போதுமானதென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஹோமாகம - முல்லேகமவில் மகப்பேற்று மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றை நேற்றுமுன்தினம் திறந்துவைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கம் வரவு-செலவுத் திட்ட வரி மூலமான வருமானமாக 1000 பில்லியன் ரூபாவினை மாத்திரமே பெறுகிறது. இது உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரிதாகவே இருக்கும். ஆகையினால் வெளிநாட்டுக் கடனுதவிகளை நாட வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசாங்கம் இருக்கிறது. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, விமான நிலையம், வைத்தியசாலை, துறைமுக அபிவிருத்தி போன்றவற்றுக்கு இந்த வெளிநாட்டு கடனுதவிகள் பெரிதும் உதவுகின்றன. வெளிநாட்டுக் கடனுதவிகளைப் பெறும் வரையில் உள்நாட்டு அபிவிருத்திகள் சாததியமாகாது.

விவசாய அமைப்புகள் நெல் விலையை அதிகரிக்கக் கோருகின்றன. நெல் கொள்வனவு விலையினை 5 நிமிடங்களின் அமைச்சரவை தீர்மானத்தினை பெற்று 100 ரூபாவாக அதிகரிப்பது இலகுவானது. ஆனால் விவசாயிகள் ஒருவிடயத்தினை நன்கு உணர வேண்டும். நெல் கொள்வனவு விலையினை நாங்கள் அதிகரித்தால் அரிசியின் விலை 200 ரூபாவினை தாண்டிவிடும். நிர்வாக திட்டமிடல் என்பது போஸ்டர் ஒட்டுவதுபோல் இலகுவானதல்ல. அரிசியினால் பல அரசாங்கங்கள் மாறிய வரலாறும் உண்டு.

அரிசி விலை அதிகரிக்காது என்று நாங்கள் கூறவில்லை. பொருட்களின் விலையதிகரிப்புக்கு ஏற்ப சம்பளமும் அதிகரித்து வந்துள்ளது. அன்று அரச உத்தியோகத்தரின் சம்பளம் 80 ரூபாவாக இருந்தது. ஆனால் இப்போது அது பல மடங்காக அதிகரித்திருக்கிறது. இது பொருட்களின் விலையேற்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட மாறு தல் என்பதை உணர வேண்டும்.

கல்வி திணைக்களத்தினால் பல பாடசாலைகளில் மாணவ விடுதிகள் இயங்குகின்றன. இங்குள்ள மாணவர்களுக்கு மூன்றுவேளை உணவு கொடுதது, இரண்டுவேளை தேநீரும் கொடுக்கப்படுகிறது. இதற்கு ஒரு மாணவனுக்கு செலவாவது வெறும் 2500 ரூபாய் மாத்திரமே. இதனடிப்படையில் மூன்று அங்கத்துவர்களைக்கொண்ட குடும்பமொன்று புத்திசாலித்தனமாக வாழ்வதற்கு 7500 ரூபாய் போதுமானதாக இருக்கும்.

ஆனால், பெரும்பாலானவர்கள் ஆடம்பரங்களை விரும்புகிறார்கள். உணவு விடுதிகளில் சாப்பிடுவதையும் அனாவசியமாகச் செலவு செய்வதிலுமே பலர் காலம் தள்ளுகின்றனர். அண்மையில் ஒரு நட்சத்திர விடுதி விருந்துபசாரத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கு ஒருவருக்கான உணவு 6500 ரூபாவாக இருந்தது. இதுபோன்ற அனாவசிய, ஆடம்பரச் செலவுகளை நாம் தவிர்ப்பது சிறந்தது.

இலங்கையின் சனத்தொகையினை விட கைத்தொலைபேசிகள் அதிகமாக இருக்கிறது. அதேபோல் ஆடம்பர வாகனங்களும் தாராளமாக இருக்கின்றன. இதனால்தான் வாழ்க்கைசெலவு அதிகம் என பலர் கூச்சலிடுகின்றனர். ஆகையினால், ஆடம்பரங்களையும் படோபகாரங்களையும் தவிர்த்து புத்திசாலித்தனமாக வாழ்ந்தால் நாடும் வளம்பெறும், நாமும் வளம் பெறுவோம் என்றார்.

# நவநீதம்பிள்ளையை அதிகாரியாக இலங்கை விடயத்தில் நியமிக்க முடிவு



## என்கிறது திவயின

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில், மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக நியமிப்பதே அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள யோசனையின் உண்மையான நோக்கம் என தெரியவந்திருப்பதாக திவயின கூறியுள்ளது.

ஜெனிவாவுக்கான அமெரிக்க தூதுவர் ஐலின் போகன், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு வழங்கிய விருந்துபசாரம் ஒன்றில் இது குறித்து தெரிவித்துள்ளதாக ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன. தமது யோசனை நிறைவேற்றப்படும் எனவும் இதன் பின்னர், சகல அதிகாரங்களுடன் நவநீதம்பிள்ளைக்கு, கற்றுக் கொணட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த முடியும் எனவும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளதாக திவயின குறிப்பிட்டுள்ளது

# புலம்பெயர் தமிழரின் தேவைகளை நிறைவேற்றி வருகிறார் ரணில்

## சாடுகிறார் மைத்திரி குணரட்ன



(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களின் தேவைகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குரல் கொடுத்து வருவதாக, கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பறறுவதற்கு முன்னர், வலுவான ஓர் எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டியுள்ளது. ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியின் மடியில் இருக்கின்றார்.

புலம்பெயர் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு தேவையான கருத்துக்களையே ரணில் வெளியிடுகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளினால் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்காளர் பலம் மேலும் பலவீனமடையும்.

மே தினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. புலம்பெயர் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எடுக்கும் முயற்சி சிங்கள வாக்காளர்களை விட்டு விலகிச் செல்ல நேரிடும்.

ரணில் விக்ரமசிங்க ஓர் காலாவதியான பண்டமாகவே நோக்கப்பட வேண்டும். அவரை மக்களிடம் விற்பனை செய்ய முடியாது.

போர் பற்றிய ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்களே, கட்சியிலிருந்து மக்கள் விலகக் காரணமாக அமைந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டுக் கண்காணிப்பை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை

(கொழும்பு)

வெளிநாட்டுக் கண்காணிப்பு பொறிமுறைமைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் வெளிநாட்டு கண்காணிப்பு பொறிமுறைமை அவசியமற்றது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தில் யுத்தக் குற்றச் செயல்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை என பதில் ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எனினும், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றன என்பதனை சர்வதேச நாடுகள் கண்காணிக்க வேண்டுமென சில தரப்பினர் கோரி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதனை வெளிநாட்டுச் சக்திகள் கண்காணிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பான சவால்களை எதிர்நோக்கத் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுனந்த கைதாகவில்லை



(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையின் அலுவலகத்திற்கு எதிரில் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு ஆதரவாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுனந்த தேசப்பிரிய படப்பிடிப்பில் ஈடுபட்டுள்ளார். அதனைக் கண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் சுனந்தவைப் பார்த்து "நீ கொட்டியா, நீ புலி" எனக் கோசமிட்டுள்ளனர். இதனையடுத்து அவரது பாதுகாப்புக் கருதி சுவிஸ் பொலிஸார் அவரை அழைத்துச் சென்று அவரது வீட்டில் விட்டுள்ளனர்.

ஆனால் இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி, ஜெனிவாவில் வசித்து வரும் ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய சுவிஸ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரவித்துள்ளது.

31) தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறிக்கப் பயன்படுத்தும் நிறம் யாது?
1) கறுப்பு 2) சிவப்பு 3) கபிலம் 4) நீலம்

32) எல்லாப் பறவைகளுக்கும் பொதுவான இயல்பு எது?
1) பறப்பதற்கு இயலுமாக இருத்தல் 2) உடலில் இறகு இருத்தல் 3) பழங்கள் மட்டும் உணவாகக் கொள்ளல்

33) எல்லா மாணவர்களுக்கும் பொதுவான் இயல்பு எது?
1) தினமும் 5 மணித்தியாலங்கள் பாடம் தொடர்பான வேலையில் ஈடுபடுதல்
2) ஏதேனும் ஒரு வகுப்பில் கல்வி கற்றல் 3) அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்

34) பழம் நழுவிப் பாலில் விழுதல் என்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி?
1) எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் குமரனுக்கு, தந்தை புத்தகம் சிலவற்றைப் பரிசாகக் கொடுத்தல்
2) எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் நிசாருக்கு பந்தொன்றும் துடுப்பொன்றும் பரிசாக வழங்குதல்
3) எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் அந்தோனிக்கு தொலைக்காட்சி பார்ப்பதற்குத் தடை விதித்தல்

35) வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான். இக்கூற்றுக்குப் பொருத்தமான நிகழ்ச்சி யாது?
1) பாடசாலை முடிவடைந்து வீடு செல்லும்போது ரமணனின் காலில் காயம் ஏற்படுதல்
2) அநாதரவான பிச்சைக்காரனைக் கேலி செய்த கோபி கால் சறுக்கிக் கீழே விழுதல்
3) பாடசாலைக்கு வரும் வழியில் நிசாந்தன் நண்பன் ஒருவனோடு சண்டையிடுதல்

36) நாம் விலங்குகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆடை வகை எது?
1) பருத்தி 2) பட்டுத்துணி 3) நைலோன் துணி 4) டெரின் ஆடை

37) மண்ணினுள் புதைக்கும்போது மிக நீண்டகாலம் பிரிகையடையாது சூழலை மாசடையச் செய்யும் பதார்த்தம் எது?
1) விலங்குக் கழிவு 2) பிளாஸ்ரிக்கு 3) கண்ணாடி 4) பருத்தி இழை

38) பாடசாலையொன்றின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய அம்சங்கள் அல்லாதவை எவை?
1) பாடசாலைக் கொடியும், பாடசாலைக் கீதமும்
2) பாடசாலை மகுட வாசகமும், பாடசாலைக் கழுத்துப் பட்டியும்
3) பாடசாலைக் கீதமும், தமிழ்மொழி வாழ்த்துப் பாடலும்
4) பாடசாலைக் கொடியும், பாடசாலைச் சின்னமும்

39) பாதை ஒன்றை அமைப்பதற்கு 4 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதேவேலையை 8 மனிதர்கள் மூலம் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?
1) 5 நாட்கள் 2) 10 நாட்கள் 3) 20 நாட்கள்

40) ஒரு ஆற்றின் நீர் மணிக்கு 4 கிலோமீற்றர் வேகத்தில் பாய்கின்றது. மனிதனொருவன் மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் ஆற்று நீரோட்டத்திற்கு எதிராக வள்ளம் ஒன்றைச் செலுத்துகிறான். அவன் செல்கின்ற உண்மையான வேகத்தை மணிக்கு எத்தனை கிலோமீற்றர் எனக் காண்க.
1) 8 2) 5 3) 2

## கடந்த திங்கட்கிழமை வெளியான வெளியீடு - 42 கேள்விகளின் விடைகள்

1) மின்மினிப்பூச்சி, மண்புழு, வண்ணத்துப்பூச்சி
2) இரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையும் வீசுகின்றார்கள்.
3) உடு / விண்மீன்
4) உருவாக்கினோம் / ஆக்கினோம்
5) இறந்தகாலம்
6) குறைந்துவிட்டன / அழிந்துவிட்டன
7) எச்சம் 8) சுளை 9) சேய்மை
10) நவீனம் 11) பொன்விழா
12) நூலகம் / நூல்நிலையம்
13) 2 14) 3 15) 2
16) 1) Beautifull 2) Old
3) Flower 4) Football
17) 1. ஒரு சைக்கிளோட்டப் போட்டி
2. பரிசளிப்பு விழா / பரிசு வழங்குதல்
3. உயரம் பாய்தல்
18) 1. பால் 2. புத்தகம்
3. இடியப்பம் 4. கண்ணாடி
19) தீயணை கருவி
20) எரிபொருள் நிரப்பு நிலையம், அலுவலகங்கள்
21) 1) A 22) A 23) B 24) A 25) A
26) சிவப்பு நிற மனிதன்
27) சப்தஸ்வரங்கள் 28) மகுடி
29) களிமண் 30) வெப்பநிலை
31) 2 32) 1 33) 2 34) 3
35) 2 36) 2 37) 1 38) 2
39) 3 40) 2 41) 4 42) 3
43) எண்ணி எண்ணி 44) போ போ
45) ஐயோ ஐயோ 46) வருக வருக
47) ஓட்டமும் நடையுமாக 48) தந்தை
49) புகையிரத நிலையம் 50) கடிதம்
51) விழுந்ததை உணர்த்த
52) உதயன் 53) தொலைபேசி
54) இருபது 55) வட்டி, பாதுகாப்பு
56) ஆன்மீகத்தை 57) செம்மஞ்சள்
58) 2 kg 300g 59) 986
60) 3 61) 45 /=
62) 200/= 63) 200 ml
64) 150/= 65) 250g
66) XVII 67) 2050 ml
68) 3kg 900g 69) 52m
70) 915 m
71) 12
72) 321







# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி


# கல்வி முரசு

வெளியீடு 43



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.




01) உருக்களுக்கு இடையிலான தொடர்பைச் சரியாகக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.


1) AG, DF, BE, CH
02) AD, BC, FG, EH
03) AG, BE, CF, DH


| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| A – சீனி | ஒரு கிலோ கிராம் | 52.00 |
| B – பருப்பு | 500 கிராம் | 45.00 |
| C – தேயிலை | 250 கிராம் | 100.00 |
| D – கடலை | ஒரு கிலோ கிராம் | 78.00 |
| E – மாசி | 100 கிராம் | 45.00 |


02) பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் விடை எது?
1) ABDCE 2) ECBDA 3) ECDBA

03) விலைப்பட்டியலிலுள்ள ஒவ்வொரு பொருளையும், ஒரு கிலோகிராம் வீதம் கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் தேவைப்படும்?
1) ரூ. 968.00 2) ரூ. 1031.00 3) ரூ. 1070.00

**பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 6ஆம், 7ஆம், 8ஆம் வினாக்களுக்கு விடைதருக.**








04) ஒரு பென்சிலின் விலை எவ்வளவு?
1) ரூ.10.00 2) ரூ.15.00 3) ரூ.20.00 4) ரூ.25.00

05) ஒரு பேனாவின் விலை எவ்வளவு?
1) ரூ.10.00 2) ரூ.15.00 3) ரூ.20.00 4) ரூ.25.00

06) ஒரு புத்தகத்தின் விலை எவ்வளவு?
1) ரூ.110.00 2) ரூ.120.00 3) ரூ.130.00 4) ரூ.140.00

**பின்வரும் உருக்களில் பொருத்தமற்ற உருக்களின் கீழ்க் கோடிடுக.**

07) 

08) 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனில், அவ்வருடத்தில் மார்ச் மாதம் 1ஆம் திகதி என்ன கிழமை?
1) வெள்ளி 2) சனி 3) ஞாயிறு 4) திங்கள்

09) வரண்ட காலங்களில் அதிக தாகம் ஏற்படும். ஒருவனுக்கு அதிக தாகம் ஏற்படுகிறது எனில்,
1) வரண்ட காலமாக இருக்கும் 2) நீரிழிவு நோயாக இருக்கலாம்
3) எதுவும் உறுதியாகக் கூறமுடியாது

10) பாடசாலையில் நிதமும் இருப்பவை,
1) ஆசிரியர், மாண்வர்கள் 2) கட்டடம், தளபாடம் 3) அதிபர், ஆசிரியர்

11) பசியால் வாடிய நரியொன்று திராட்சைத் தோட்டத்தினூடாகச் சென்றபோது, திராட்சைக் குலையைக் கண்டுபறித்துத் தின்ன முயற்சி செய்தது. இந்த வாக்கியத்திலுள்ள கருத்துப் பிழை யாது?
1) நரி திராட்சைத் தோட்டத்திற்குச் செல்வதில்லை
2) நரி ஒருபோதும் திராட்சைப் பழம் உண்பதில்லை
3) நரிக்குப் பசி ஏற்படுவதில்லை


12) குமரனின் ஒரே தங்கையான மாலதி தனது தங்கையுடன் கடைத்தெருவுக்குப் போனதாகக் கூறினாள். இக்கூற்று உண்மையாகவும் இருக்கலாம். இதற்குச் சரியான விளக்கம் யாது?
1) குமரனுக்கு மாலதி தவிர இன்னொரு தங்கையுண்டு
2) குமரனின் பெரியம்மாவின் சிறிய மகள், குமரனின் வீட்டில் தங்கியுள்ளமை
3) குமரனின் மாமாவின் இளைய மகள், குமரனின் வீட்டில் தங்கியுள்ளமை

**13ஆம், 14ஆம் வினாக்களிலே தொடக்கத்திலே தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.**


13) தமிழ், சிங்களப் புத்தாண்டு ஏப்ரல் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் பிறக்கும்.
1) இது பெரும்பாலும் நிகழும் நிகழ்வாகும் 2) இது எப்போதும் உண்மையாகும்
3) இது சிலவேளை நிகழும் நிகழ்வாகும்

14) காலை வேளையில் ஒருவர் கிழக்கு நோக்கி நடந்து சென்றால், அவரது நிழல் அவரைப் பின் தொடர்ந்து வரும.
1) இது பெரும்பாலும் உண்மையாகும் 2) இது எப்போதும் உண்மையாகும்
3) இது சிலவேளை உண்மையானதன்று

**15ஆம், 16ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலத்திற்கு அமைய, வெற்றிடத்துள் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்து இடுக.**

15) 

1) 8 2) 9 3) 10

16) 

1) 30 2) 20 3) 10






**ஒரு விற்பனை நிலையத்தில் பொருட்களுக்கான விலைகள் பின்வருமாறு இரகசியக் குறியீட்டின் அடிப்படையில் எழுதப் பட்டது. இதனைப் பயன்படுத்தி 17, 18 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| W | H | I | T | E | B | O | A | R | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 0 |

17) பொம்மைக்காரரின் விலை ரூ.1845 என்பதை இரகசியக் குறியீட்டில் எழுதுக..............................

18) கணிதச் செய்கையொன்றில் பெருக்கல் @ என்ற அடையாளத்தாலும், வகுத்தல் # என்ற அடையாளத்தாலும் குறிப்பிடப்பட்டிருப்பின் 12 @ 5 # 3 என்பதன் பெறுமதி எவ்வளவு?..............................

**ஒரு தோட்டத்திலுள்ள மரங்களின் எண்ணிக்கையைக் காட்டும் வட்ட வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 19ஆம், 20ஆம், 21ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**




19) தோட்டத்திலே எத்தனை வீதம் தென்னை மரங்கள் உண்டு?..............................


20) தோட்டத்திலுள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை 600 எனில் மா மரங்களின் எண்ணிக்கை யாது?
..............................

21) தோட்டத்தில் சம எண்ணிக்கையில் காணப்படும் மரங்கள் எவை?..............................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

22) வயலில் சூடு அடிக்கும் களத்தில் "குல்லம்" என அழைக்கப்படுவது?
1) சுளகு 2) அரிவாள் 3) வைக்கோல் 4) பாய்

23) நாய் கடித்தால் உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி,
1) காயத்தைத் துணியினால் கட்டுதல் 2) காயத்தை சவர்க்காரத்தினால் கழுவுதல்
3) காயத்தின் மீது தேங்காய் எண்ணெய் பூசுதல் 4) தேங்காய்ப் பாலைக் குடிக்கக் கொடுத்தல்

24) 
அருகே காட்டப்பட்டுள்ள நட்சத்திரக் கோலத்தைக் குறிக்கும் பெயர் யாது?
1) வேட்டைக்காரன் 2) கலப்பை
3) தேள் 4) பெருநாய்

25) உடற்பயிற்சி செய்வதற்கு முன்னர் உடலை இளஞ்சூடாக்க உகந்த செயற்பாடு,
1) மெதுவாக நடத்தல் ஆகும் 2) ஒரே இடத்தில் நடத்தல் ஆகும்
3) ஒற்றைக் காலின் நிற்றல் ஆகும் 4) ஆழமாக உட்சுவாசித்து வெளிச்சுவாசித்தல் ஆகும்

26) கறி சமைக்கும்போது எலுமிச்சம் புளி சேர்ப்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம்,
1) அடுப்பில் வைப்பதற்கு முன்பு 2) அடுப்பில் கறி இருக்கும் போது
3) அடுப்பில் இருந்து இறக்கியவுடன் 4) அடுப்பிலிருந்து இறக்கி கறி ஆறிய பின்

27) இலங்கையின் அரச இலட்சினையில் காணப்படும் மூன்று பகுதிகள்,
1) நிறைகலசம், நெற்கதிர், தர்மச் சக்கரம் 2) நிறைகலசம், நெற்கதிர், அரசம் இலைகள்
3) சூரிய சந்திரன், தர்மச் சக்கரம், அரசம் இலைகள் 4) சூரிய சந்திரன், நெற்கதிர், சங்கு

28) மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த அரசன் யார்?
1) துட்டகைமுனு 2) மகாசேனன் 3) தாதுசேனன் 4) பராக்கிரமபாகு

29) துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்வதற்கு முன் மிகவும் கவனிக்கப்பட வேண்டியது துவிச்சக்கர வண்டியின் பகுதி,
1. முன்பக்கச் சில்லுத் தடைகள் 2) பின்பக்கச் சில்லுத் தடைகள்
3) மணி அடிக்கக் கூடியதாக இருத்தல் 4) ஆசனம்

30) கிரிக்கெட் விளையாட்டில் ஒரு குழுவில் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 9 2) 11 3) 15 4) 16

## மஞ்சி கிண்ண கரப்பந்தாட்டம்

# மூன்றாவது முறையும் மாகாண மட்ட சம்பியனானது காங்கேசன் ஐக்கியம்

(அளவெட்டி)

மஞ்சி வெற்றிக் கிண்ண பெண களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தொடர்ந்து மூன்றாவது முறையாகவும், மாகாண மட்ட சம்பியன் கிண்ணத்தை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் கைப்பற்றிக் கொண்டது.

மன்னார் பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முல்லைத்தீவு மின்னொளி விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

முன்னதாக காலிறுதிப் போட்டியில் கிளிநொச்சி பாரதி விளையாட்டுக்கழகத்தை 25:13 , 25:15, 25:23 என்ற செட்கள் அடிப்படையில் வெறறி பெற்ற காங்கேசன் துறை ஐ. விளையாட்டுக்கழகம் அரை இறுதியில் மன்னார் இளஞ்சுடர் விளையாட்டுக் கழகத்துடன் மோதியது. இதில் 25:10, 25:08, 25:13 என்ற செட்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.



இறுதிப்போட்டி முல்லைத் தீவு மின்னொளியுடன நடைபெற றது. ஆரம்பம் முதல் போட்டி முடிவடையும் வரை காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமே போட்டியில் ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 25:10,25:10, 25:13 என்ற செட்கள் அடிப்படையில் காங்கேசன் துறை ஐக்கியம் வெற்றிபெற்று மாகாண மட்ட சம்பியனாகி தேசிய மட்டத்துக்குத் தெரிவானது.

எதிர்வரும் 7,8, ஆம் திகதிகளில் தேசிய மட்டப்போட்டிகள் மன்னார் பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியின் பயிற்றுவிப்பாளராக தயாளபாலன் உள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (93)

# வவுனியா வடக்கு கல்வி வலய பெருவிளையாட்டு முடிவுகள்

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக் கிடையிலான பெருவிளையாட்டு முடிவுகளின் தொடர்ச்சி...

**கபடி 19 வயது ஆண்கள்**

முதலாமிடம் - கல்மடு மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - ஓமந்தை மத்திய கல்லூரி, மூன்றாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம்,

**கபடி 15 வயது பெண்கள**

முதலாமிடம் ஓமந்தை மத்திய கலலூரி, இரண்டாமிடம் - குளவிசுட்டான் அ.தக. பாடசாலை , மூன்றாமிடம் - கனகராயன் குளம் மகாவித்தியாலயம்.

**கபடி 19 வயது பெண்கள்**

முதலாமிடம் - கல்மடு மகா வத்தியாலயம், இரண்டாமிடம் ஓமந்தை மத்திய கல்லூரி, மூன்றாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம்.

**காற்பந்தாட்டம் 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் புதுக்குளம் மகா வித்தியாலயம், இரண்டாமிடம் தரணிக்குளம் கணேஷா வித்தியாலயம், மூன்றாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்,

**காற்பந்தாட்டம் 17 வயது ஆண்களா**

முதலாமிடம் நொச்சிமோட்டை கனிஷ்ட வித்தியாலயம் இரண்டாமிடம் நெடுங்கேணி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

**காற்பந்தாட்டம் 19 வயது ஆண்கள்**

முதலாமிடம் புதுக்குளம் மகா வித்தியாலயம், இரண்டாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி விததியாலயம், மூன்றாமிடம் நெடுங்கேணி மகாவித்தியாலயம்.

**காற்பந்தாட்டம் 19 வயது பெண்கள்**

முதலாமிடம் பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், இரண்டாமிடம்- கனகராயன் குளம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - தரணிக்குளம் கணேஷா வித்தியாலயம்.

**எல்லே 19 வயது ஆண்கள்**

முதலாமிடம் கல்மடு மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - புதுக்குளம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம்-ஓமந்தை மத்திய. கல்லூரி.

**எல்லே 19 வயது பெண்கள்**

முதலாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - நெடுங்கேணி மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - குளவிசுட்டான் அ.த.க பாடசாலை.

(முற்றும்) (12)

# பெண்களுக்கான உதைபந்தாட்டம் கரவெட்டி அணி மாவட்ட சம்பியன்



வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழில் இடம்பெற்ற பெண்களுக்கான கால்ப்பந்தாட்டப் போட்டியில் யாழ. கரவெட்டிப் பிரதேச செயலக அணி யாழ்மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானததில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டியின் ஆரம்பத்தில் இரு அணிகளும் கோலகள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. போட்டியின் நிறைவில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப் பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளை கரவெட்டி பிரதேச செயலக அணி உரிய முறையில் பயன்படுத்திக் கொண்ட நிலையில் கரவெட்டி பிரதேச செயலக அணி 3:1 என்ற கோல் கணக்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றிபெற்றது.

# மருதங்கேணி கோட்ட மட்ட போட்டி முடிவுகள்

மருதங்கேணி கோட்ட மட்டப் போட்டிகளின் தொடர்ச்சி...

**குண்டெறிதல்** - முதலாமிடம் - என். அனுசன் மருதங்கேணி ஏச். ரி.எம. பாடசாலை, இரண்டாமிடம் -என். யூட்நிறுசன் - மணற்காடு ஆர்.சி.ரி. எம் பாடசாலை, மூன்றாமிடம் - பீ. நிசாந் குடத்தனை ஜி.ரி.எம் பாடசாலை.

தட்டெறிதல - முதலாமிடம் -ஏ. இசைச்செல்வன் மருதங்கேணி ஏச்ரி.எம் பாடசாலை, இரண்டாமிடம் -வீ. தனுசன் அம்பன் ஏ.எம்.ரி. எம் பாடசாலை, மூன்றாமிடம் - எம். மதுசன வெற்றிலைக்கேணி பரமேஸ்வர வித்தியாலயம.

**ஈட்டி எறிதல்** – முதலாமிடம் - கே. றஜபன் மணற்காடு ஆர்.சி. ரி.எம் பாடசாலை, இரண்டாமிடம் - ஜ. சிந்துஜன் உடுத்துறை மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - க. சுவர்னராஜ் அம்பன் ஏ.எம.ரி. எம் பாடசாலை

**அஞ்சல் ஓட்டம் 4 X 100 மீற்றா**

முதலாமிடம் - மணற்காடு ஆர்.சி. ரி.எம் பாடசாலை, இரண்டாமிடம் - கட்டைக்காடு ஆர்.சி.ரி.எம் பாடசாலை, மூன்றாமிடம் - மருதன்கேணி ஏச்.ரி.எம் பாடசாலை

**அஞ்சல் ஓட்டம் 4 X 400 மீற்றா**

முதலாமிடம் - மணற்காடு ஆர்.சி.ரி.எம் பாடசாலை, இரண்டாமிடம் - மருதங்கேணி ஏச்.ரி.எம் பாடசாலை, மூன்றாமிடம் - செம்பியன்பற்று ஜி.ரி. எம்.எஸ் பாடசாலை.

(116) (தொடரும்)




# வவுனியா வடக்கு கல்வி வலய விளையாட்டுப் போட்டிகள் இன்று

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டுப்போட்டிகள் இன்று புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மீள்குடியேற்ற பிரதேசத்தை பாரியளவில் உள்ளடக்கிய இவ் வலயத்தில் நீண்ட காலத்தின் பின்னர் அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பங்கு கொள்ளும் வகையில் வலய மட்டப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

யுத்தகாலத்தில் இவ் வலயத்தின் ஒரு பகுதி இராணுவப் பகுதியாகக் காணப்பட்டமையினால் ஏனைய பாடசாலைகளுடன் இணைந்த விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது.

எனினும் இம்முறை சிறப்பாக இடம்பெறவுள்ள இவ்வலய மட்டப் போட்டிகள் 21 ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அஜ்மலின் பந்து வீச்சில் சந்தேகம் இல்லை

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மலின் பந்துவீச்சில் எந்தவித சந்தேகங்களும் கிடையாது எனவும், சயீட் அஜ்மலின் பந்துவீச்சு சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறைக்கு ஏற்றவாறே காணப்படுகிறது என சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றிருந்த போதிலும், இந்திய அணியின் சில வீரர்கள் அஜ்மலின் பந்து வீச்சுத் தொடர்பாக சந்தேகம் வெளியிட்டதாக இந்தியத் தொலைக்காட்சியொன்று செய்தி வெ்ளியிட்டிருந்தது.

இந்நிலையில் கருத்து வெளியிட்ட சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லோகார்ட், ஒரு பந்துவீச்சாளரின் பந்துவீச்சுத் தொடர்பாக முறையிடுவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை வழிமுறைகளைக் கொண்டு காணப்படுகிறது. போட்டி மத்தியஸ்தர்கள், நடுவர்கள் ஆகியோர் ஒரு பந்து வீச்சாளரின் பந்துவீச்சை முறையற்ற தாகக் கருதின் அதை முறையிட வழிகள் காணப்படுவதாகத் தெரி வித்தார்.



அஜ்மலை ஏற்கனவே பரிசோதித் துள்ளதாகவும், நேரடியான போட்டிகளிலும் அவரை கவனித்துள்ளதாகவும், அனுமதிக்கப்பட்ட அளவிற்குள் அவர் பந்துவீசுவதாகவும், அவரின் பந்துவீச்சுத் தொடர்பாக எந்தவித பிரச்சினைகளும் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

சாதாரண கண்களுககுத் தெரியும் காட்சிக்கும், உண்மையான அளவீடுகளுக்கும் வித்தியாசம் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், அஜ்மல் சர்வதேச கிரிக்கெட் சபை விதிகளுக்கு ஏற்றவாறு பந்துவீசுவதாக உறுதிப்படுத்தினார்.

# இலங்கை அணியின் பந்து வீச்சில் மாயமெதுவுமில்லை


இலங்கை அணியின் பந்துவீச்சு முன்பிருந்த அளவுக்கு தற்போது மாயங்கள் மிகுந்தது அல்ல என இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் கிரேம் ஸ்வான் தெரிவித்துள்ளார். 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இலங்கைக்கு வந்துள்ள இங்கிலாந்து அணியின் தயார்ப்படுத்தல்கள், திட்டங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே கிரேம் ஸ்வான் இவ்வாறு தெரிவித்தார்.



இலங்கை அணி தொடர்ந்தும் சிறந்த அணியாகக் காணப்படுகிறது, குறிப்பாக இலங்கையில் வைத்து விளையாடும் போது மிகச்சிறந்த அணியாகக் காணப்படுகிறது. இலங்கை அணியை வெற்றி கொள்ள சிறப்பாக ஆடவேண்டிய தேவையுள்ளது.

பாகிஸ்தான் அணியும், இலங்கை அணியும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான அணிகள் எனத் தெரிவித்த கிரேம் ஸ்வான், இலங்கை அணி - பாகிஸ்தான் அணியை விட தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் அணி எனத் தெரிவித்தார். குறிப்பாக முன்வரிசையில் குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன இருவரும் காணப்படுவது இலங்கையின் பலம் எனவும் எனினும் இலங்கையின் நட்சத்திரச் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் ஓய்வின் பின்னர் இலங்கையின் பந்துவீச்சு பெரியளவுக்கு மாயங்களைக் கொண்டதாக இல்லை எனத் தெரிவித்தார்.

# தமிழக அரசின் முடிவை அடுத்து கூடங்குளத்தில் பணி தொடங்கியது



(வள்ளியூர்)

கூடங்குளம் அணுமின் நிலையத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அரசின் இந்த முடிவுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிலையில் கூடங்குளம் அணுமின் நிலையப் பகுதியில் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படுவதைத் தடுக்க 10,000 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மத்திய பாதுகாப்புப் படையின் 300 பேரும், கேரளாவில் இருந்து வந்த கலவரத் தடுப்புப் பிரிவு பொலிஸார் 600 பேரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முன்னேற்பாடாக நேற்றுமுன்தினம் 49 பெண்கள் உட்பட 186 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதையொட்டி ராதாபுரம் தாலுகா முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் கடற்கரை கிராமங்களில் வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு போக்குவரத்து முடங்கியது. பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த பொலிஸார் எல்லையில் உள்ள சோதனைச் சாவடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து பொலிஸார் வந்த வண்ணம் உள்ளனர். மேலும் கூடங்குளம் அணுமின் நிலைய வளாகத்திற்குள் கடலோரக் காவல படை விமானம் ஒன்று சுற்றி வருகிறது. பாதுகாப்பு வளையத்திற்குள் அத்துமீறி வரும் படகுகள் மற்றும் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் மற்றும் துணை இராணுவத்தின் பாதுகாப்புடன் நேற்றுமுன்தினம் மாலை 3 மணி அளவில் அணுமின் நிலையம் திறக்கப்பட்டு 300 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டனர். 7 மாதங்களுக்குப் பிறகு பணிக்குத் திரும்பியதால் ஊழியர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மின்உற்பத்தி விரைவில் தொடங்கப்படும் என்று தெரிகிறது. இதனால கூடங்குளம் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# முதல்வராக நியமிக்க வேண்டும் வலியுறுத்துகிறார் எடியூரப்பா

## புதிய தலைவலியில் பா.ஜ.க



(பெங்களூர்)

சுரங்க முறைகேடு வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டதால் தம்மை மீண்டும் கர்நாடக முதல்வராக அறிவிக்க வேண்டும் என அம்மாநில முன்னாள் முதல்வர் எடியூரப்பா பா.ஜ.க தலைமையுடன் மோதி .வருவதால் பா.ஜ.க.வுக்குப் புதிய தலைவலி ஏற்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக அவர், இராஜ்ய சபா தேர்தலுக்குத் தமது ஆளாகப் புட்டசாமியைப் போட்டி வேட்பாளராக அறிவித்தார். தம்மை முதல்வராக அறிவிக்கும்படி எடியூரப்பா விதித்திருந்த 48 மணி நேரக் கெடுவும் முடிந்த நிலையில், அவரைப் பலவீனப்படுத்த கட்சித் தலைமை பல முயற்சிகள் எடுத்து வருகிறது. சட்டமன்றத்தில் அவரது ஆதரவாளர்களாக இருக்கும் அறுபது உறுப்பினர்களிடையே குழப்பம் ஏற்படுத்தி அவர்களைப் பிரிக்கும் வேலையையும் கட்சித் தலைமை செய்து வருகிறது.

இந்நிலையில் தற்போது முதலமைச்சராகப் பதவி வகித்து வரும் சதானந்த கவுடாவைப் பதவி நீக்கம் செய்யக் கூடாது என அவரது ஒக்கலிக சமுதாயமும் எடியூரப்பாவை மீண்டும் முதல்வராக்க வேண்டும் என அவரது லிங்காயத்து சமுதாயமும் குரல் கொடுத்து வருகின்றன. இதனால் பா.ஜ.க.வினர் குழப்பத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட ஜீப்பை மோதித் தள்ளியது ரயில்

(லக்னோ)

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் நேற்றையதினம் தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட ஜீப்பின் மீது பயணி கள் ரயில் மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே 15 பேர் உயிரிழந்ததுடன் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.




உத்தரப் பிரதேச மாநிலம் ஹாத்ராஸ் என்ற இடத்தில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மாநிலத்தில் மதுர பகுதியிலிருந்து கஸ்யான்ஜி நோக்கிப் பயணிகள் ரயில் சென்று கொணடிருந்த வேளை குறித்த ஜீப் வண்டி பாதுகாப்பற்ற கடவையுள்ள பகுதியால் தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட வேளையே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் ரயில் விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை மாதமும் உத்தரப் பிரதேச மாநிலத்தில் திருமண நிகழ்வொன்றுக்குச் சென்றுவிட்டு வந்த பேருந்து தண்டவாளத்தைக் கடக்க முற்பட்டு ரயில் மோதியதில் 38 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# நடராஜனின் விளக்கமறியல் ஏப்ரல் இரண்டு வரை நீடிப்பு



(திருச்சி)

திருச்சியில் முறையற்ற வகையில் தொழிலதிபரிடம் 1.60 கோடி ரூபாய் மோசடி செய்த வழக்கில், சசிகலா கணவர் நடராஜனின் சிறைக் காவலை எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

பல்வேறு வழக்குகளில் கைதாகி திருச்சி சிறையில் உள்ள நடராஜன், நேற்றுமுன்தினம் காலை திருச்சி ஜே.எம். 4 நீதிமன்றில் பணமோசடி வழக்கில் காவல் நீடிப்புக்காக ஆஜர்படுத்தப்பட்டார். நடராஜனை வரும் ஏப்ரல் 2ஆம் திகதி வரை சிறையில் அடைக்க நீதவான் புஷ்பராணி உத்தரவிட்டார்.

இதையடுத்து பலத்த பொலிஸ பாதுகாப்புடன் எம்.நடராஜன் அழைத்துச் செல்லப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். முன்னதாக சிறை வாசலில் நடராஜன் நிருபர்களிடம் கூறியதாவது:-

வழக்கு போடுவது அரசின் கடமை. அதை எதிர்கொள்வது எங்களின் கடமை. தெய்வம் நினறு கொல்லும் என்பார்கள். தெய்வத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அது போல் நடககக்கூடாது.

சசிகலா கூறியதுபோல ஜெயா பப்ளிக்கேசனுக்கும், முதலைமைச்சர் ஜெயலலிதாவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அது தொடங்கிய போது நான் தான் பணம் கொடுத்தேன் எனத் தெரிவித்தார்.

## தவக்காலச் சிந்தனை



இயேசு மனிதர்களுக்கு முழுநலமளிக்க இவ்வுலகிற்கு வந்தார. கடவுளிடமிருந்து நாம் பெறுகின்ற நலனுக்குப் பெயர் மீட்பு, விடுதலை, நிலைவாழ்வு. இந்த முழுநலனை வழங்கவந்த இயேசு பல மனிதருடைய உடல்நோய்களையும் உளநோய்களையும் குணமாக்கினார். இத்தகைய செயல்களால் அக்காலத்தில் பலர் பயன்பெற்றனர்.

### நன்மை செய்து வாழ காலமும் நேரமும் தேவையா?

நன்மை செய்வதற்குக் காலம், நேரம் உண்டா என நாம் கேட்கலாம். ஆனால் இயேசுவின் காலத்தில் ஓய்வுநாள என்பது பல துல்லியமான சட்ட திட்டங்களைக் கொண்ட ஒரு பழக்கமாக மாறி விட்டிருந்தது. இது முறையாகாது என இயேசு கற்பித்தார். எனவே, இயேசு ஒரு கலகக்காரர் என்றும் மக்களைத் திசைதிருப்புகிறார் என்றும் கூறி, அவருடைய எதிரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இன்றும்கூட இந்நிலை நமது சமுதாயத்தில் நிலவுவதை நாம் காண்கிறோம். மக்களுக்கு நன்மை செய்கின்ற மனிதர்களை இழிதுரைக்கின்ற சமுதாயம் எமது சமுதாயம். அடுத்தவர்களுக்கு நன்மை விளைந்தால் அதனால் தங்களுக்கு ஏதோ குறை ஏற்பட்டதுபோல நடக்கின்ற மனிதர்கள் இன்றும் உள்ளனர். இது ஒருவித சுயநலப் போக்கின் விளைவேயன்றி வேறல்ல. ஆனால் இயேசு நமக்கு உணர்த்தும் உண்மை இது: நன்மை செய்வதற்குக் காலமும் நேரமும் கிடையாது. எந்நாளும் எவ்விடத்திலும் நன்மை செய்வதே நம் வாழ்வின் நோக்கமாக இருக்க வேண்டும் என கற்பிக்கிறார்.

**ஆர்.மதுசன், பாசையூர்**

# சிறுநீர்க் கழித்தால் சுட்டேபுடுவேன் பொலிஸாரின் விளம்பரத்தால் பரபரப்பு



(திருவண்ணாமலை)

தமிழ்நாட்டின் திருவண்ணாமலையில் பொலிஸ் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையம் உள்ளன.

இந்தப் பகுதியில் பேருந்து நிறுத்தம் உள்ளதால் பயணிகள் இந்தப் பொலிஸ் அலுவலக சுவர்களுக்கு முன்பே சிறுநீர் கழிக்கின்றனர். இதைத் தடுக்க பலமுறை எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டும் தொடர்ந்து சிலர் இங்கு சிறுநீர் கழித்து வந்தனர்.

இதனால் பொறுமை இழந்த திருவண்ணாமலை பொலிஸார் தற்போது விவகாரமான சுவரொட்டிகளை ஒட்டி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதில், சுட்டேபுடுவேன் இங்கு சிறுநீர் கழிக்காதீர் என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. நிர்வாணமாக நிற்கும் ஒரு சிறுவன் கையில் துப்பாக்கி வைத்துக் கொண்டு உள்ளது போல் படம் வரையப்பட்டுள்ளது. இதைப் பார்த்த திருவண்ணாமலை பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# மத்திய ரயில்வே அமைச்சராக முகுல்ராய் பதவியேற்றார்



மத்திய ரயில்வே அமைச்சராக முகுல் ராய் நேற்றுக காலை பதவி ஏற்றார். நாடாளுமன்றத்தில் கடந்த 14 ஆம் திகதி மத்திய ரயில் பட்ஜெட் தாக்கல செய்யப் பட்டது. இந்த பட்ஜெட்டை திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தினேஷ் திரிவேதி தாக்கல் செய்தார்.

இதில் பயணிகள் கட்டணம் உயர்த்தபட்டது. திரிணாமுல் காங்கிரஸ் கட்சி பயணிகள் கட்டண உயர்வை திரும்ப பெறக்கோரியது. இதற்கு தினேஷ் திரிவேதி மறுப்புத் தெரிவித்தார். இதைதொடர்ந்து திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பனர்ஜி, தினேஷ திரிவேதியை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறும் அடுத்து முகுல் ராயை ரயில்வேத்துறை அமைச்சராக நியமிக்குமாறும் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். ஆனால் தினேஷ் திரிவேதி தனக்கு எந்தத் தகவலும் வரவில்லை தனது கட்சித் தலைவர் மம்தா பனர்ஜி நேரடியாகக் கேட்டுக் கொண்டால் பதவி விலகத் தயார் என்று கூறினார். இதை தொடர்ந்து மம்தா கேட்டு கொண்டதற்கு இணங்க தினேஷ் திரிவேதி தனது பதவியை இராஜினாமாச் செய்தார். இதைத் தொடர்ந்து நேற்றுக்காலை 10 மணிக்கு புதிய மத்திய ரயில்வே அமைச்சராக முகுல் ராய் பதவியேற்றார்.

# மத்திய கிழக்கு சமாதான முயற்சி ஜனாதிபதி ஒபாமா அப்பாஸ் பேச்சு



(வோஷிங்டன்)

மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகள் குறித்து ஆறு மாதங்களின் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூட் அப்பாஸ் ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர்.

மத்திய கிழக்கு சமாதானம் குறித்து அமெரிக்கா உறுதியாக உள்ளதாக பலஸ்தீன ஜனாதிபதியிடம், பராக் ஒபாமா குறிப்பிட்டதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கூறியுள்ளார்.

அண்மைக்கால மோதல்கள் மற்றும் ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை இஸ்ரேல், பாலஸ்தீனம் முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகளை வலுப்படுத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனுக்கு இடையிலான நேரடி பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது குறித்த ஜோர்தான் மன்னரின் முயற்சிகளையும் பராக் ஒபாமா பாராட்டியுள்ளார்.

ஈரானின் அணுத்திட்டம் மீதான தாக்குதல் தொடர்பாக இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் இடம் பெற்ற விவாதங்கள் காரணமாக பலஸ்தீன - இஸ்ரேல் பேச்சுவார்த்தை பின்னடைவைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## கென்னடியின் கொலை குறித்து தெரிந்து வைத்திருந்த பிடல்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் கென்னடி படுகொலை செய்யப்படுவார் என்று, கியூபாவின் பிடல் காஸ்ட்ரோவுக்கு முன்பே தெரியும் என சி.ஐ.ஏ.யின் முன்னாள் தலைவர் தான் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.யின் தென் அமெரிக்காவுக்கான உளவுப் பிரிவுத் தலைவராக இருந்தவர் பிரையான் லட்டல்.

இவர் எழுதியுள்ள "கேஸ்ட்ரோஸ் சீக்ரெட்ஸ் த.சி.ஐ.ஏ. அண்ட் கியூபாஸ் இன்டலிஜென்ஸ் மெஷின்" என்ற தலைப்பிலான புத்தகம் அடுத்த மாதம் வெளிவர உள்ளது.

இந்நிலையில் இப்புத்தகத்தில் கடந்த 1963ஆம் ஆண்டில்முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடியின் படுகொலை குறித்து முன்பே பிடல் காஸ்ட்ரோ அறிந்து வைத்திருந்தார் என லட்டல் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1963ஆம் ஆண்டில் கென்னடியைக் கொன்ற குற்றவாளி லீ ஹார்வே ஒஸ்வால்ட், அப்படுகொலை சம்பவத்திற்கு முன் கியூபாவுக்கு வருவதற்காக விசா கோரி விண்ணப்பித்திருந்தார்.

ஆனால் அவருக்கு விசா மறுக்கப்பட்டது. இது குறித்து தனது ஊழியர் ஒருவரிடம் பேசிய பிடல் காஸ்ட்ரோ, ஒஸ்வால்ட்ஸ் கென்னடியைக் கொல்வதற்காக அமெரிக்கா செல்ல இருப்பதாகத் தெரிவித்ததாக அப்புத்தகத்தில் லட்டல் குறிப்பிட்டுள்ளார்.

பிடலுக்கு கென்னடியின் படுகொலை முன்பே தெரிந்திருந்தும் அதைத் தடுக்க அவர் எதுவும் செய்யவில்லை என லட்டல் குற்றம் சாட்டியுளளார். அதே நேரம் பிடல், தான் அப்படுகொலையை செய்ய உத்தரவிட்டார் என தான் கூறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## பேரணி நடத்திய பலர் கியூபாவில் கைதாகினர்

கியூபாவில் பேரணி நடத்திய சமூக தன்னார்வக் குழுக்களின் உறுப்பினர்கள் பலர் கைது செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

16ஆவது போப் பெனடிக்ட், கியூபாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இந்தப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

கியூபாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரியே அவர்கள் இந்தப் பேரணியை நடத்தியுள்ளனர்.

இதன் போது, நூற்றுக் கணக்கான பெண்கள் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கியூபாவின் தலைநகர் ஹவானாவில் மேற்கொள்ளப்பட்ட இந்த அமைதிப் பேரணியில், நூற்றுக் கணக்கான சமூக ஆர்வலர்கள் கலந்துக் கொண்டதுடன், அரசியல் கைதிகளின் உறவினர்களும் கலந்துக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்காவில் மீண்டும் வோல் ஸ்ட்ரீட் போராட்டம் 73 பேர் சிறையிலடைப்பு! இது அமெரிக்காவில். கேள்வி கேட்க முடியுமா....?

## சர்வதேச அணுசக்தி அமைப்பை வருமாறு அழைக்கும் வடகொரியா

(சியோல்)

தமது நாட்டிற்கு விஜயம் செய்யுமாறு சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பிற்கு வட கொரியா அழைப்பு விடுத்துள்ளது.

அணுசக்தி முகவர் அமைப்பின் கண்காணிப்பாளர்களை நாட்டில் இருந்து வெளியேற்றி மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் வட கொரியா இந்த அழைப்பை விடுத்துள்ளது.

வட கொரியாவின் இது குறித்த கடிதம் கடந்த 16 ஆம் திகதி கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பு, இதன் விபரங்கள் குறித்து கலந்துரையாடப்படுவதாக கூறியுள்ளது. யுரேனிய செறிவூட்டல், அணு மற்றும் நீண்ட தூர ஏவுகணைப் பரிசோதனைகளை இடைநிறுத்துவதற்கு வடகொரியா கடந்த மாதம் இணக்கம் தெரிவித்திருந்தது.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பாளர்களையும் நாட்டிற்குள் அனுமதிக்க வட கொரியா இணக்கம் தெரிவித்ததாக அமெரிக்கா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு மணி நேர போர்நிறுத்தம்; சிரியாவிடம், ரஷ்யா வலியுறுத்து

(மொஸ்கோ)

சிரியா நாளாந்தம் இரண்டு மணித்தியால மோதல் தவிர்ப்பினை மேற்கொள்ள வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தமது நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியான வகையில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.


அரசாங்க மற்றும் ஆயுதப் படையினர் தாமதமின்றி யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும் என அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

முன்னதாக ஐக்கிய நாடுகள் சபையில் சிரியா தொடர்பில் முன்வைக்கப்பட்ட இரண்டு யோசனைகளுக்கு, ரஷ்யா எதிர்த்து வாக்களித்திருந்தது.

எனினும் சிரியாத் தலைநகரில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து, ரஷ்யா இந்தப் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

## மெய்தான் பாருங்கோ...

### கூட்டுறவு உழைப்பு



அண்டைக்கொருக்கா வெள்ளனக்காலமை என்ர சகபாடி கையில ஒரு பேப்பரையும் கொண்டு ஆத்துப் பறந்து என்னட்டை ஓடி வந்தான் பாருங்கோ. இவன் கையில பேப்பரைக் கொண்டு ஓடி வந்ததைப் பாத்திட்டு, நானும் நாட்டில என்னவோ ஏதோ பேந்தும் பிசகிப் போட்டுதோ... எண்டு பலதும் பத்துமா யோசிச்சுக் கொண்டு நிண்டன்.

டேய் மச்சான் உவங்கள் என்னெண்டு பேப்பர் அடிக்கிறாங்கள்...? இஞ்சை பார்! முன்பக்கத்தில என்ன பிழை வந்திருக் கெண்டு... எண்டு சொல்லி பேப்பரைத் தந்தான். நானும் வாங்கிப் பாத்தன். பாத்தாப் பிறகுதான் அந்தப் பிழை எவ்வளவு பரதூரமானது எண்டது விளங்கிச்சுது. அது ஒரு தமிழ்நாட்டுப் பேப்பர் கண்டியளே! ஆரோ இந்தியாவால வரேக்கை கொண்டு வந்த இடத்தில அந்தப் பேப்பர் ஒண்டு இவன்ர கையில அம்பிட்டுப் போச்சுது. பிழையை விளங்கிக் கொண்டு நான் சிரிக்க... என்ர சகபாடி என்னைப் பேசினான்.

அவன் ஏன் பேசினான் எண்டால் நானும் முன்னம் வன்னியில இருக்கேக்கை ஒரு பேப்பர் கொம்பனியில உந்த எழுத்துப் பிழை பாக்கிற வேலை கொஞ்சநாள் செய்தனான் பாருங்கோ! அதுதான் பேப்பரில பிழையைக் கண்டதும் அவன் என்னட்டை விளக்கம் கேட்கிறதுக்கு ஓடியந்திட்டான்.

"எமது கிராமத்துக்கு மாவட்ட மந்திரி வருகிறார்..." எண்ட வசனத்தில ஆரோ இரவு வேலை செய்யும் கொம்பியூட்டர்காரர் 'மாவட்ட' எண்ட சொல்லில 'வ'னா எண்ட சொல்லுக்குப் பக்கத்தில் ஒரு அரவு எழுத்தை ('ா') ப் போட்டு அடிச்சுவிட, அதை எழுத்துபபிழை பாக்கிற ஆக்கள் (புறூவ்காரர்) தவறவிட்டிட்டினம். அது அச்சில அடிபட்டு எமது கிராமத்துக்கு 'மா வாட்ட' மந்திரி வருகிறார்..." எண்டு அடிபட்டுப்போச்சு.

கடவுளே! அடுத்தநாள் காலமை, அந்தப் பேப்பரை முதல் நாள் இரவு எழுத்துப் பிழைபாத்த புறூவ்காரற்ர மனநிலை எப்பிடியிருக்கும்...? அதை நினைக்கத்தான் எனக்குச் சிரிப்பு வந்திட்டுது! சிரிச்சு விட்டன்.

ஒரு பேப்பரை உருப்படியாக் கொண்டு வாறதுக்கு அந்தக் கொம்பனிக்குள்ள எத்தனைபேர்... எத்தனை விதமாக பங்காற்ற வேணுமெண்டது பேப்பரை வாசிக்கிற ஆட்களைவிட, அந்தத் துறையோட சம்பந்தப்பட்ட ஆட்களுக்குத்தான் தெரியும் கண்டியளே!

ஒரு பேப்பரை உருவாக்கிறதுக்கு எல்லாற்ர உழைப்பும் அர்ப்பணிப்பும் கூடுதலாகத் தேவை பாருங்கோ!

மாத வருமானத்தில கண்நோக்கமாயிருக்காமல், மனப்பூர்வமாக தன்னை உணர்ந்து ஒவ்வொருத்தரும் வேலை செய்தால்தான் பேப்பரும், தரமானதாக.. எழுத்துப் பிழையில்லாமல் சனங்களுக்கு மத்தியில எடுபடும் பாருங்கோ! அதைவிட்டிட்டு, எட்டரைக்கு வேலைக்கு வந்தாச்சு... செய்தியளைத் தேடி எடுத்தாச்சு... பக்கங்கள் நிரப்பியாச்சு... மிசினில அடிச்சாச்சு... பேப்பர் வித்தாச்சு... காசாச்சு... மாதம் முடியச் சம்பளம் எடுத்தாச்சு.. எண்டு பட்டும் படாமலும் இயந்திரம் மாதிரி இயங்கிற ஆக்கள் கடைசி வரைக்கும் பத்திரிகை வேலைக்குப் பொருத்தப்படா இராது எண்டது என்ர அனுபவத்தில ஊறிய வெளிப்பாடு.

தேத்தண்ணி ஊத்துறவரிலயிருந்து கொம்பனியை நிர்வகிக்கிற முதலாளிவரை ஒவ்வொரு பகுதியும் ஒன்றோடொன்று, விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையோட அன்பு பாசமாக இருக்கவேணும். அதாவது ஒரு கூட்டுறவு உணர்வோட உழைக்கவேணும். ஒரு குடும்பமாகச் செயற்படவேணும் கண்டியளே!

நீங்கள் கவனிச்சுப் பார்த்திருப்பியள்! பெருநாள் விழாவுகளுக்கு தங்கட வாசகர்களுக்கு வாழ்த்துத் தெரிவிச்சுப் போட்டு, 'வலம்புரி குடும்பம்', 'தினமுரசு குடும்பம்'... எண்டு போடுறவையள்ளே அது தாங்கள் எண்டைக்கும் ஒரு குடும்பமா செயற்படுகிறதைக்காட்டுறது.

அதோடை பாருங்கோ குடும்பம் எண்டு சொல்லேக்கை குடும்பத்துக்கை சகோதரங்களுக்கிடையில சின்னச் சின்னப் பூசல்கள், பிணக்குகள் வந்தாலும் பிறகு அதெல்லாத்தையும் மறந்திட்டு ஒற்றுமையாகிற மாதிரி... ஒரு பேப்பர் கொம்பனிக்கை நிர்வாகப் பகுதி... ஆசிரியபீடம்... ஒப்புநோக்குப் பகுதி... இயந்திரப் பகுதி.... விநியோகப்பகுதி... எண்டு ஒற்றுமையாக இயங்க வேணும். என்ர பகுதியில நான்தான் 'கொம்பு' மற்றவை யெல்லாம் தும்பு... எண்டு நினைச்சு ஒருத்தரும் செயற்படக் கூடாது. ஒருத்தருக்கொருத்தர் ஒவ்வொருவருடைய சுமையைத் தாங்கவேணும். பேப்பரில எழுத்துப் பிழையில்லாமல் வரவேணுமெண்டு பிரதம ஆசிரியரோ அல்லாட்டி சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரோ... எழுத்துப்பிழை பாக்கிற இன்னொருவரோ மட்டும் நினைச் சால் போதாது. அதை எல்லாரும் நினைக்க வேணும். பேப்பர் தரமிழந்தால், அது என்ர குடும்ப மானமெண்டு நினைக்க வேணும் பாருங்கோ!

எனக்குத் தெரிஞ்ச ஒரு பேப்பருக்கு பிரதம ஆசிரியர் ஒருவர் இருந்தவர் பாருங்கோ. அவற்ற வேலை 'எடிட்ரோறி' (ஆசிரியர் தலையங்கம்) மட்டும்தான எழுதுறதெண்டில்லை. புறூவ்கார் பாததிட்டு விட்ட பக்கப் பேப்பருகளை எடுத்து தானும் ஒரு பட்டம எழுத்துகளில் மேஞ்சுபோட்டு திருத்தம் போட்டுக் குடுப்பார். இது அவருக்கு தேவையில்லா ஒரு விடயம். எழுத்துப்பிழை பார்க்கிறதுக்குத் தான் எனக்குக்கீழ ஆட்கள் சம்பளத்துக்கு இருக்கினமே... எனக்கென்ன...? அப்படியெண்டு அந்தாள் நினைக்கிறேல்லை.

இதே மாதிரித்தான் ஒரு சிரேஷ்ட ஆசிரியரும் இருந்தவர். அவற்ர வேலை செய்தியளை மட்டும் எழுதிக்குடுக்கிறது. ஆனா அவரும் புறூக்காறற்ற வேலையைச் செய்து குடுத்து பேப்பர் பிழையில்லாமல் வரவேணுமெண்டு பார்ப்பார். இப்படிப்பட்ட ஆட்களோட வேலை செய்த எனக்கு, என்ர சகபாடி "மா வாட்டுற..." விசயத்தைக் கொண்டு வந்து காட்டினாப்போல, என்ர மனசுக்குள்ள கிளறுப்பட்ட தெல்லாத்தையும் இதில கொட்டிப்போட்டன். ஒரு பேப்பரில பிழை கிடந்திட்டால் அது எந்தப் பேப்பராக இருந்தாலும் சரி அந்தப் பேப்பர் பக்கத்திலுள்ள சில பிரச்சினையளை அறிவு பூர்வமாக நோக்க வேணும் கண்டியளே! எழுத்துப் பிழையள் தவிர்க்கேலாத விடயம். அதுக்காக பிழைவிடுதலே தொழிலாகப் போகக்கூடாது. ஏனெண்டால் அது ஒரு குடும்பத்தின் மானப் பிரச்சினை மட்டுமில்லை அதுவொரு கூட்டுறவு உழைப்பும் கூடப் பாருங்கோ!

-சின்னக்குட்டி சின்னச்சாமி



# இந்தியப் பிரதமர் மீதான அழுத்தம் புரிந்து கொள்கிறது இலங்கை

(ஜெனிவா)

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமை சபையின் தீர்மானத்தை ஆதரிக்கத் தயார் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்திய நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பதன் பின்னணியில் இருந்த அழுத்தங்களை இலங்கையால் புரிந்துகொள்ள முடியும் என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங்கின் அறிவிப்பை இலங்கை அரசு எப்படிப் பார்க்கிறது என்பது குறித்து பி.பி.சி செய்திச் சேவைக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், இலஙகை அரசின் சார்பில் தம்மால் பேச முடியாது என்று ரஜீவ விஜேசிங்க தெளிவுபடுத்தினார்.

அதேசமயம், எந்த அழுத்தங்களின் அடிப்படையில் மன்மோகன் சிங்கின் அறிக்கை வந்துள்ளது என்பதை தம்மால் புரிந்து கொள்ள முடிவதாகவும் அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினையின் பின்னணியில் இருக்கும் அனைத்து விஷயங்களையும், ஐநா மன்றத்தில் உறுப்பினர்கள் விவாதிக்கும் போது விளங்கிக் கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.

இலங்கை அரசைப் போலவே, இலங்கையிலுள்ள அனைத்து குடிமக்களின் நலன்களிலும் இந்தியாவுக்கும் அக்கறை உள்ளதாக தாம் கருதுவதாகவும், அதை மனதில் வைத்துப் பார்க்கையில், ஐ.நா மன்றத்தின் இந்தக் குறிப்பிட்ட தீர்மானம் இலங்கைக் குடிமக்களின் ஆக்கபூர்வமான முன்னேற்றத்துக்கு வழி வகுக்கப்போவதில்லை.

மேலும், இலங்கை குடிமக்களுக்கு முன்னேற்றங்கள் ஏற்படக்கூடாது என்று நினைக்கும் சக்திகளே இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றன. அத்தகைய சக்திகளை வெற்றிபெற விடக்கூடாது.

அந்த அடிப்படையில் பார்க்கும்போது இலங்கையில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாடு உள்ளவர்களுடன் இந்தியா ஒத்துப் போகாது என்றே நான் நம்புகிறேன்.

இப்படியான தீர்மானங்களின் மூலம் ஐ.நா சபையின் செயற்பாட்டில் மாற்றங்கள் வந்துவிடும் என்றும் நாங்கள் கவலைபபடுகிறோம். எனவே இப்படியான தீர்மானங்கள் தொடர்பலான கொள்கைகள் குறித்தும் எமக்கு கவலைகள் உள்ளன. இதேமாதிரியான கருத்துக்களையே இந்தியாவும் அண்மையில் வெளிப்படையாக விடுத்திருந்த அறிக்கைகளில் கூறியிருந்ததையும் நாம் கவனத்தில் வைக்க வேண்டும்.

அதேசமயம், இலங்கைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை தாம் ஆதரிக்க மாட்டோம் என்கிற ரீதியில் கருத்துக்களை வெளியிட்டுவந்த இந்திய அரசு, தற்போது அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்டிருப்பதை எப்படி பார்க்கிறீர்கள் என்கிற கேள்விக்கு பதிலளித்த அவர், இலங்கைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது என்றே தாங்கள் கருதியதாகத் தெரிவித்தார்.

இலங்கை மக்கள் அனைவரின் நலன்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இந்தியா கூறுவதை நாங்களும் விரும்புகிறோம். இந்தத் தீர்மானத்தில் மூலம் அது நடைபெறும் என்று இந்தியாவில் சிலர் ஆழமாக நம்புகிறார்கள். எனவே இந்த தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் அது நடைபெறுமானால் அதை நாங்கள் வரவேற்கிறோம் என்றுதான் இந்தியா கூறுகிறது. எனினும் இந்தியா முன்னர் வெளியிட்டிருந்த அறிக்கைகளுடன் சேர்த்தே மன்மோகன் சிங்கின் நிலைப்பாடடை நாம் பார்க்க வேண்டும்.

இந்த பின்னணியில், இலஙகை என்ன செய்ய வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறதோ, அதை இந்தத் தீர்மானத்தை ஆதரிக்காமல் இருந்தால் சிறப்பாக செய்ய முடியும் என்றே தாம் கருதுவதாகவும், எனவே, ஐ.நா மன்றத்தில் இந்தத் தீர்மானம் மீதான விவாதங்கள் எப்படி போகப் போகின்றன என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றும் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# உள்ளூரிலுள்ள அமெரிக்கர்கள் என்னைக் கொல்வதற்கு முயற்சி

(கொழும்பு)

அமெரிக்கப் பொருட்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்ததையடுத்து தான் கடுமையாகத் தாக்கப்பட்டு வருவதாகவும் உள்ளூர் அமெரிக்கர்கள் தன்னைக் கொல்ல முயறசிப்பதாகவும் அமைச்சர் விமல் வீரவ்ஞ்ச ' தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்க அனுசரணையுடன் முன் வைக்கப்படும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் அரசாங்கத்துடனான எமது ஐக்கியத்தை வெளிப்படுத்தவும் நான் ஒரு தேசாபிமானி என்ற வகையில் அமெரிக்காவையும் அமெரிக்க பொருட்களையும் பகிஷ்கரிக்குமாறு கோரினேன். நான், இவ்வாறு கூறியதால் ஆச்சரியமான வகையில், உள்ளூர் அமெரிக்கர்கள் என்னைக் கொல்ல முயற்சிக்கின்றனர் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இவ்வாறான கருத்தை வெளியிட்டதால் இந்தளவு எதிர்ப்பும் அமைதியின்மையும் ஏற்படுமென, தான் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.



இத்தகைய உரைகளினால் உணர்ச்சிவசப்படும் ஊடக நபர்கள் அதிகமானோர் இருக்கிறார்கள் என இப்போது நான் உணர்ந்து கொண்டேன். இலங்கையில் அமெரிக்காவின் பல புதல்வர்களும் புதல்விகளும் இருக்கின்றனர் என்பதை அறிந்து ஆச்சரியமடைகிறேன்.

ஜனாதிபதி ஒபாமா கென்யாவுக்கு மாத்திரமல்லாமல் இலங்கைக்கும் பயணம் செய்துள்ளார் போல் தெரிகிறது. அவர்கள் என்னைக் கொல்ல முற்பட்டால் நான் அலட்டிக் கொள்ள மாட்டேன்.

இந்த ஊடகங்கள் எனது கோரிக்கையைத் திரிபுபடுத்தி, இலங்கைப் பொருட்களைப் பகிஷகரிக்குமாறு நான் கோரியதைப் போல் சித்திரிக்க முயற்சிக்கின்றன. வெளிநாட்டுப் பொருட்களை பகிஷ்கரிக்குமாறு நான் கோரியதால் இவர்கள் ஏன் இந்தளவு குழப்பமடைகிறார்கள் என்று தெரியவில்லை. அமெரிக்கத் தூதரகம் அவர்களுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து அதை செய்யச்சொன்னால் அவர்கள் செய்கிறார்கள் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தபால்மூல வாககாளர் அட்டைகள் மீளப் பெற்றுக்கொள்ள முடிவு

(கொழும்பு)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்ட தபால்மூல வாக்காளர் அட்டைகள் அடங்கிய பொதிகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரதேச சபைகளுக்கான வாக்கெடுப்பு, நீதிமன்றத்தினால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எச்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தபால் மூல வாக்காளர் அட்டைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டைகளை மீண்டும் பெற்றுக்கொள்ளவுள்ளதாக வன்னி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக இந்த அடையாள அட்டைகள் மீண்டும் சேகரிக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளின் வாக்காளர்களுக்கு வழங்கப் பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவின் தலைவிதியானது 23 ஆம் திகதியுடன் மாறுகிறது

## ஆரூடம் கூறுகிறார் குணதாச



(கொழும்பு)

இந்தியாவின் தலைவிதி எதிர்வரும் 23 ஆம் திகதியோடு மாறிவிடும். அந்நாடு துண்டு துண்டாகப் போகின்றது. ஜெனிவாவில், அமெரிக்கா வெறறி பெறும் என்றால் இந்தியா அமெரிக்காவிற்கு எதிராக வாக்களிக்கும். தோல்வி அடையுமென்றால் ஆதரவாக வாக்களிக்கும். இதுவே இந்தியாவின் சித்தாந்தம் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இதுதொடர்பாக குணதாச அமரசேகர மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா என்றுமே இலங்கைக்கு எதிராகவே செயற்படும். தமது நலனுக்கே முன்னுரிமை வழங்கும். எனவே மேற்கண்ட சித்தாந்தத்தையே இன்று கடைப்பிடித்து வருகிறது.

அதேவேளை தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு இந்திய மத்திய அரசாங்கம் அடிபணிந்து எமக்கெதிரான செயற்பாட்டிற்குள் இறங்கியுள்ளது. இது இந்தியாவின் கடைசிக் காலமாகும்.

தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ்நாட்டைப் பிரிப்பதற்கான திட்டத்தை அமெரிக்கா நிச்சயம் முடுக்கிவிடும். இதற்குத் தமிழ்நாடும் சாதகத் தன்மையோடு இணங்கிச் செயற்படும். இந்த ஆரம்பத்தோடு அந்நாடு துண்டு துண்டாகப் பிரியும்.

ஜெனிவாவில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தோல்வி கண்டாலும் இலங்கையைப் பிரிக்கும் தந்திரோபாயத்தை அமெரிக்கா கைவிடாது. வெற்றி பெற்றாலும் இந்தத் தந்திரோபாயம் தொடரும் என்றார்.

# எடிசலாட் இணைய பாடநெறி; ஆரம்பமானது வேலைத்திட்டம்

(கொழும்பு)

கல்வி அமைச்சு, கூட்டிணைக்கப்பட்ட அரச வணிக (பல நோக்கு) கூட்டுத்தாபனம் மற்றும் எடிசலாட் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்த இணைய (வெப்) பாடநெறி வேலைத் திட்டத்தின் தொடக்க விழா கடந்த இரண்டாம் திகதியன்று சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனா தலைமையில் நடைபெற்றது.



இந்த வேலைத் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் சகல தேசிய பாடசாலைகளுக்கும் மடிக் கணினிகள் மற்றும் எடிசலாட் டொங்கில்கள் வழங்கப்படன. இந்த இணையத்தின் ஊடாக கற்றல் மென்பொருளைப் பயன்படுத்தி இணைய பாடநெறியை பயில்வதற்கு ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

தொழில் நுட்பம் மற்றும் ஆய்வு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, கல்வி அமைச்சின் செயலாளர் எச். எம். குணசேகர, வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிரிசேன, கூட்டிணைக்கப்பட்ட அரச வர்த்தக (பல நோக்கு) கூட்டுத் தாபனத்தின் தலைவர் பிதீப் குணவர்தனா, எடிசலாட் நிறுவனத்தின் தலைவர் துமிந்த ரத்னாயக்கா, கல்வி அமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக் கிளையின் பணிப்பாளர் நல் குணதாசா உட்பட சகல தேசிய பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

# சகல பிரதேச செயலக பிரிவுக்கும் கலை, கலாசார நிலையம் வேண்டும்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் சகல பிரதேச செயலகங்களிலும் கலை கலாசார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் கலாமன்றங்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கி கலைஞர்களுக்கான ஊக்குவிப்புத்தொகை வழங்கும் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கலைஞர்கள் கௌரவிப்பு என்பதும் கலாமன்றங்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் இன்றைய காலத்திற்கு அவசியமான ஓர் நிகழ்வு. மூன்று தசாப்த காலமாக தொடர்ந்த யுத்தம் காரணமாக எமது கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் அழிக்கப்பட்டு இருந்ததுடன் கலை, கலாசாரத்தை மேம்படுத்த கூடியதொரு நிலை காணப்படவில்லை.

ஆனால் இன்றைய சமாதான காலத்தில் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுக்கக்கூடியதொரு சூழல் உருவாகியுள்ளது.

யாழ். குடாநாட்டில் யுத்தத்திற்கு முன்னர் கலைகள் மேலோங்கி இருந்ததுடன் அவற்றுடன் ஈடுபாடு கொண்டவர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். தற்போது அழிவடைந்து வருகின்ற கலை கலாசாரங்களை மேம்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து நாமும் பல்வேறு செயற்திட்டங்களை முன் னெடுத்து வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

யாழ் மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பி ஏக்கநாயக்கா சிறப்புரையாற்றினார். தொடர்ந்து கலா மன்றங்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கல், பாடசாலைகளுக்கான புத்தகப் பொதிகள் வழங்குதல், கலைஞர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி, பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தற்காலிக இடமாற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டக் காணிப் பதிவு அலுவலகம் நேற்று முன்தினம் முதல் தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இயங்கி வந்த இவ்வலுவலகம் தற்போது புனித பேதுருவானவர் ஆலயத்திற்கு அருகாமையில் முஸ்லிம் பாடசாலை வீதியில் தற்காலிகமாக இயங்கி வருவதாக காணிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (04)


## மாணவன் தற்கொலை

(கிளிநொச்சி)

வவுனியா கோமரசன்குளம் மகாவித்தியாலய மாணவன் ஒருவர் நேற்று அதிகாலை தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த வினோகரன் (வயது-16) என்ற மாணவனே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

# இறுதிப் போட்டிக்கு பங்களாதேஷ் அணி



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை அணியை பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுகளால் தோற்கடித்தது. இதன் மூலம் இத்தொடரின் இறுதிப்போட்டிக்கு பங்களாதேஷ் அணி தகுதிபெற்றுள்ளது.

மீர்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் 232 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்தாடியபோது மழை பெய்ததால் அவ்வணியின் இலக்கு மாற்றப்பட்டு 40 ஓவர்களில் 212 ஓட்டங்கள் எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 37.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது பங்களாதேஷ் அணி.

1984 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியமை இதுவே முதல் தடவையாகும். பாகிஸ்தான் அணி 9 புள்ளிகளைப் பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது. பங்களாதேஷ், இந்திய அணிகள் தலா 8 புள்ளிகளைப் பெற்ற போதிலும் இந்தியாவுடனான போட்டியில் பங்களாதேஷ் வென்றதால் அவ்வணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இத்தொடரில் இலங்கை அணி ஒரு போட்டியில்தானும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நகரில் வீதி விபத்து ஆட்டோ சாரதி காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் டிப்பர் வாகனமும் ஆட்டோவும் மோதியதில் ஆட்டோ மோசமாகச் சேதமடைந்ததுடன், ஆட்டோ சாரதி தலையில் படு காயம் அடைந்துள்ளார்.

இரண்டாம் குறுக்குத் தெரு அடைக்கல மாதா ஆலயத்திற்கு முன்பாக நேற்று மாலை 5.00 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

இவ்விபத்தில் பாசையூர் வலன்புரத்தைச் சேர்ந்த எஸ்.சதாநாயகம் (வயது-38) என்ற நபரே தலையில் படுகாயமடைந்த நிலையில் காணப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார் இரு தரப்பிடமும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதேவேளை, மாட்டீன் வீதிப் பகுதியில் கார் ஒன்று வாய்க்காலுக்குள் விழுந்து விபத்துக்குள்ளாகியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# அகற்றப்படுகிறது மண் அணைகள் களை கட்டுகிறது மண்டைதீவு

மண்டைதீவு மத்தியில் படையினரால் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுள்ள மக்கள் குடியிருப்புக்களைச் சூழ அமைக்கப்பட்டிருக்கும் பாரிய மண் அரண் கனரக இயந்திரம் மூலமாக அகற்றப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் மீள் குடியமர்ந்த மக்கள் கனரக இயந்திரமொன்றை வாடகைக்கு அமர்த்தி குறித்த மண் அரணை அகற்றி வருவதுடன், தமது காணிகளைத் துப்பரவு செய்து காணிகளுக்கு வேலியிட்டும் வருகின்றனர். அத்துடன், யுத்தத்தின் போது சேதமடைந்த வீடுகள் மற்றும் மதில்கள், கடைகள் முதலியவற்றை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை அப்பகுதியில் தற்காலிக கிராம சேவகர் அலுவலகம், பொலிஸ் காவல் நிலையம் மற்றும் கடைகள் முதலியவையும் இயங்கி வருகின்றன.

வெதுப்பகம் ஒன்று அங்கு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. குறித்த மக்கள் குடியிருப்பு கடந்த தை மாதம் 16 ஆம் திகதி அன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் காரணமாக படையினரால் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஏற்கனவே படையினரினால் பொதுமக்களின் வழிபாடுகளுக்கு அவர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

## இராஜதந்திர...

முயற்சிகளுக்கு இந்தியாவின் முடிவு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் அணுகுமுறையை அவதானித்து, வாக்கெடுப்பின் போது முடிவைத் தீர்மானிக்கத் திட்டமிட்டிருந்த பல நாடுகளின் ஆதரவை இப்போது இலங்கை இழக்கும் நிலை உருவாகியுள்ளதாக ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தீர்மானத்தை தோற்கடிக்கத் தேவையான வாக்குகளைப் பெறும் இலங்கையின் இறுதிநேர முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும், ஜெனிவாவில் உள்ள கொழும்பு ஆங்கில ஊடகச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அங்கத்துவ...

களுடன் தொடர் பேச்சுக்களை நடத்த வேண்டும் எனவும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை காரணமாகக் கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள நாடுகள் குழுக்களாகப் பிரிந்துள்ளதென அவர் கூறியுள்ளார். அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் ஒரு பிரிவில் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். எவ்வாறாயினும் சில நாடுகள் அமெரிக்காவின் மேற்குலக கொள்கைக்கு எதிரான நிலைப்பாட்டினை வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாக்கெடுப்பு..

மனித உரிமை தூதுவர் அமைச்சர் மகிந்த சமரசிங்க இப்பிரேரணை குறித்துப் பதிலளித்து உரையாற்றுவார். அடுத்து பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அமெரிக்க இராஜதந்திரிகள் மேற்படி பிரேரணையை வெற்றிகரமாக மனித உரிமைகள் பேரவையில் நிறை வேற்றுவதற்கு தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

அதேவேளை, இப்பிரேரணை நிறைவேற்றும் முயற்சியை அங்கத்துவ நாடுகளின் ஆதரவுடன் முறியடித்துவிட வேண்டும் என்பதில் இலங்கை அரசு விடாப்பிடியாக உள்ளது.

# விழிப்புணர்வுச் செயலமர்வு

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் இம்மாவட்டத்திலுள்ள கரையோரப் பாடசாலை மாணவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு அண்மையில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வேல்ட் விஷன் நிதிப்பங்களிப்பில் இடம்பெற்ற இச் செயலமர்வில் 45 இற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மேற்படி நிலையத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும் இச்செயலமர்வு நடத்தப்பட்டுள்ளதுடன், இதில் 55 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் றீட் நித்தியானந்த குலாஸ் தெரிவித்துள்ளார். (04)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடமராட்சி கிழக்கில் தொடர்கிறது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு மீண்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளால் வலைகள், உபகரணங்கள் என்பன நாசமாக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மேற்படி கடற்பரப்பில் இழுவைப் படகுகள் மூலம் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் இப்பகுதி மீனவர்களின் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களை அழித்து நாசமாக்கி விட்டுச் சென்றுள்ளதாகவும் இதனால் மீனவர்கள் பெரும் நஷ்டமடைந்திருப்பதாக உடுத்துறை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் பொன்னுத்துரை பிரேமதாஸன் தெரிவித்துள்ளார். (116)

# இளைஞர் சுட்டுக்கொலை

கட்டுநாயக்க - ஆடி அம்பலம மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள மயானப் பகுதியில் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இனந்தெரியாத நபர்களால் இந்த துப்பாக்கிச்சூடு நேற்று முன்தினம் இரவு 8.00 மணிளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். துப்பாக்கிச்சூட்டில் 32 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கென வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கனேடிய...

யுத்தக் குற்றங்கள் தொடர்பான பிரேரணையை ஜெனிவாவில் அமெரிக்காவுடன் இணைந்து கனடாவும் ஆதரித்துள்ளது. இந்த நிலையில், அதற்கான ஆதரவு திரட்டும் பணியையும் கனடா முன்னின்று செய்து வருகிறது. இந்த நிலையிலேயே கனேடியக் குழுவினரின் இவ் விஜயம் அமைகிறது.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட், கனடிய தமிழர்களை பலமுறை சந்தித்துள்ள நிலையில், நிலைமையை கண்டறியும் நோக்கிலும் இப்பயணம் அமைவதாக கனேடிய தேசிய ஊடகம் குளோப் அன்ட் மெயில் செய்தி வெளியிட்டுள்ளது.

கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் காப்பர் அடுத்த ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# போருக்குப் பின்னரான கல்வி வளர்ச்சிக்கு சந்திரகுமார் எம்.பி.யின் செயற்பாடு காரணம்



முப்பது வருட யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறி குறுகிய காலத்திற்குள் அனைத்து துறைகளிலும் கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சி இன்று ஒரு உன்னத நிலைக்கு வந்துள்ளமைக்கு ஈபி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் தனித்துவமான செயற்பாடே காரணம் என ஓய்வுபெற்ற வடமாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கான பொதுநோக்கு மண்டபத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு குறிப்பாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கு இன்னும் நிறைய தேவைகள் உண்டு அவற்றினையும் கருத்தில் எடுத்து கடந்த காலங்கள் போன்று மேலும் அபிவிருத்திப் பணிகளை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மதனதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள் அன்ரன் அன்பழகன், தியாகராஜா, பிரதேச செயலர் சத்தியசீலன், பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஜெயக்குமார், கிராம அலுவலர் புவனராஜா, பொலிஸ் அதிகாரி ராஜபக்ஷ மாதர் அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குருநகர் வாசி முல்லைத்தீவில் மரணம்

குருநகர் பழைய இராணுவ வீதியைச் சேர்ந்த முடியப்பு யேசு தாசன் (வயது - 60) முல்லைத்தீவில் மரணமடைந்தார். சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

இவர் முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் கடற்றொழில் செய்வதற்காக குருநகர் பகுதியிலிருந்து சென்றுள்ளார்.

நேற்றுக்காலை கடலில் இருந்து திரும்பும் வேளை கடலில் தவறி வீழ்ந்துள்ளார். அந்த வேளை மூக்கினாலும் வாயினாலும் இரத்தம் வெளிவர உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமானதாக தெரியவருகிறது.

குறித்த நபர் மாரடைப்பால் இறந்ததாக மரண விசாரணை அதிகாரி தியாகராசா தெரிவித்தார். (04)

# யுவதி கொடூரமாக கொலை

(கொழும்பு)

கொபெயிகன் - மாகெலியாவ சியம்பலேவெவ பகுதியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சுமார் 20 அல்லது 22 வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவரின் சடலமே நேற்று முன்தினம் இரவு 7.35 அளவில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யுவதியின் நெஞ்சுப் பகுதியில் நூல் ஒன்றில் கட்டப்பட்ட நிலையில் கொங்கிறீட் தூண் பகுதி ஒன்று காணப்பட்டதாகவும் யுவதியின் உடலில் ஒட்டுத்துணிக்கூட இருந்திருக்கவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். மேலும் யுவதியின் முகம் பொலித்தீன் உறையில் மூடப்பட்ட நிலையில் இருந்துள்ளது எனத் தெரியவருகின்றது.

# ஊடக அபிவிருத்திக்கு புதிய நிலையம்

(கொழும்பு)

தகவல் ஊடகத்துறைக்கு நவீன வசதிகள் வழங்கும் முகமாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஊடக அபிவிருத்தி மத்திய நிலையம் இம்மாதம் 30 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

374 மில்லியன் ரூபா செலவில் ஐந்து மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள இந்த கட்டடத்தில் நவீன வசதிகள் கொண்ட கேட்போர் கூடம், ஊடக ஆய்வுக்கான நூலகம், இரு கணினிப் பிரிவுகள், அரசாங்க திரைப்படப் பிரிவின் நூதன சாலை என்பன அமைக்கப்பட்டுள்ளன.

# ரூபாவின் பெறுமதி சரிவு

(கொழும்பு)

இலங்கை ரூபாவின் பெறுமானம் நேற்றும் பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது. டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு 127.50 ரூபாவாக சரிவடைந்துள்ள நிலையில் அமெரிக்க டாலர் ஒன்றின் விற்பனை விலை 131.63 ரூபா ஆக அமைந்திருந்தது.

# சாரம் அணிந்து கொண்டு தலைகீழாக நிற்பதா?

(கொழும்பு)



அமைச்சர் விமல் வீரவன்சவின் அமெரிக்க எதிர்ப்புக் கோரிக்கையானது சாரம் அணிந்து கொண்டு தலைகீழாக நிற்பதாகவே அமையும் என அமைச்சர் திலான் பெரேரா விமர்சித்துள்ளார். பதுளையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். யாகூ, கூகுள் போன்றவற்றின் பாவனையை இலங்கையர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தமை தொடர்பிலேயே அமைச்சர் திலான் இவ்வாறு கூறியுள்ளார்.

# நாட்டிற்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டு



(மட்டக்களப்பு)

எமது ஜனாதிபதியின் வழிகாட்டலில் இராணுவத்தினரின் மூலம் பிரபாகரனின் தாயார், தமிழ்ச்செல்வனின் குடும்பம், சூசையின் குடும்பம் போனறோரை காப்பாற்றியதைப் பற்றியெல்லாம் கூறாமல் எமது நாட்டுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முயல்கின்றார்கள் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புணானையில் உள்ள இராணுவத்தின் 23 ஆவது படையணி தலைமைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி, அங்குள்ள இராணுவ அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது மட்டுமல்லாது இன்று நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் அபிவிருத்திகள் நடைபெற்றுக்கொண்டு இருப்பது இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால்தான் என்றார். இந்நிகழ்வில் 22 ஆம் 23 ஆம் படையணியைச் சேர்ந்த இராணுவ உயர அதிகாரிகள் கலந்து கொண்டதுடன், இராணுவத் தளபதிக்கு அளிக்கப்பட்ட இராணுவ மரியாதை அணிவகுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

# காணாமற் போனவர்களின் குடும்பங்கள் நிர்க்கதியில்



(மட்டக்களப்பு)

யுத்த காலத்தின் பின்னர் கணவன், மகன்மார் கடத்திச் செல்லப்பட்ட பெண்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று மட்டு. ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ளது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கலந்துரையாடலானது, தும்பாலஞ்சோலை, வெலிகா கண்டி, போப்பாவெளி. ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பெண்கள் பிரிவு இணைப்பாளர் லிவினா அசாந்தி, வடக்கு கிழக்கு மற்றும் பொது இணைப்பாளர் அந்தனி ஜேசுதாசன் ஆகியோ[illegible] இக் கலந்துரையாடலை நடத்தினர்.

கணவன், மகன்மார் கடத்தப்பட்ட குடும்பங்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயும் இக்கலந்துரையாடலின் போது, இக்குடும்பப் பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், தொழில் பிரச்சினைகள், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குடும்பத்தினர்கள் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸ், அரச அதிகாரிகள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் என அனைவருக்கும் முறையிட்டும் இதுவரை எந்த விதமான பதில்களோ பிரயோசனங்களோ ஏற்படவில்லை எனவும் எமது குடும்பங்களைக் கொண்டு நடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்

## தருமு அருளானந்தம்



அம்மன் கோயிலடி வேலணையைச் சேர்ந்த **தருமு அருளானந்தம்** அவர்கள் 19.03.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வனிதாவின் அன்புக் கணவரும், தருமினி, தருசினி, தயாளினி, சேகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகராசா, சிவஞ்ஞானம், ஜோர்ஜ், அன்டன், குயின் ஆகியோரின் அன்பு மாமனாரும், தருமு, சுவோஸ்குமார் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2012) புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மு.கனகராசா
மருமகன்

அம்மன் கோயிலடி,
வேலணை.

(இ)

# ஜனாதிபதிக்கு கடிதம்

எமது வீட்டை ஒழுங்காக வைத்திருக்காமல் 47 நாட்டு பிரதிநிதிகளிடம் சென்று அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்க்கும்படி கேட்பதில் அர்த்தமில்லை. அமெரிக்க தீர்மானத்தை எதிர்த்து நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்து வருகின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் புதிய முகாம்கள் திறப்பதை நிறுத்தி இராணுவ பிரசன்னத்தை இல்லாமல் செய்து மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்க வழி செய்ய வேண்டும் என்றும் அவர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

# அகதிகளை ஏற்கும் விகிதம் அவுஸ்ரேலியாவில் அதிகரிப்பு

(கொழும்பு)



அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோரும் வெளிநாட்டவர்களை அங்கீகரிக்கும் விகிதம் இரட்டிப்படைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவுஸ்ரேலியாவுக்கு இலங்கை, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து புகலிடக் கோரிக்கையாளர்களாக செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவுஸ்ரேலிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து அவுஸ்ரேலியாவிற்குச் செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்களை அங்கீகரிக்கும் விதம் அவுஸ்ரேலியாவில் 60 வீதமாகக் காணப்படுவதாகவும், பிரித்தானியாவில் இந்த நிலைமை 20 தொடக்கம் 30 வீதமாக காணப்படுவதாகவும் தரவுகள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை உண்மையான அகதிகளுக்கு உதவுவதற்கு அவுஸரேலிய அரசாங்கம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி அவுஸ்ரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.